விலை 2 அணா. REGD. NO. 4642.

திராவிடநாடு

மலர் 12 | 19—7—53 | இதழ் 3

ஆச்சாரியாரின் ஆணவ ஆட்சி!

ஒன்பதுபேரின் உயிரைக் கொன்றது

60-பேரை ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிட்டது

1760-பேரைச் சிறைக்குள் தள்ளிவிட்டது

கண்ணதாசன் எலும்பை முறித்துவிட்டது

இந்தக் கொடுமை எத்தனை நாட்களுக்கு?

முதலமைச்சர் தோழர் இராச கோபாலாச்சாரி அவர்களின் ஆணவ அட்டகாச ஆட்சி தனது அந்திய காலத்தை, பொது மக்களில் ஒன்பது பேரின் உயிரைக்கொன்று, உதிரத்தை விலாப்புடைக்கக் குடித்து, முடித்துக்கொள்ளும் நிலைமையை உண்டாக்கிக்கொண்டு விட்டது.

எந்த ஜனநாயக நாட்டிலும் நடைபெறாத — நடைபெறமுடியாத — நடத்த விரும்பாத கொடுமையை நமது ஆச்சாரி சர்க்கார் மிக மிகச் சாதாரணமாக — தோட்டத்திலே உள்ள மலரைப் பறித்து முகர்ந்து மகிழ்வதுபோல, நாட்டுப் பொது மக்களில் ஒன்பது பேரின் உயிரைப் பறித்து, உதிரத்தைக் குடித்து மகிழ்ந்துவிட்டது. இன்னும் எத்தனைபேரைக்கொன்று இரத்தபானம் அருந்த இந்த இராசகோபாலாச்சாரி சர்க்கார் காத்திருக்கிறது என்பது இன்னும் போகப் போகத்தான் தெரியும்.

பச்சை இரத்தத்தைக் குடித்த புலி, வெறி கொண்டு மேலும் பல விலங்குகளைக் கொல்ல காட்டில் பாய்ந்து திரிவதுபோல், மக்களின் இரத்தத்தைக் குடித்துச் சுவை கண்ட ஆச்சாரி சர்க்காரும் வெறி பிடித்து அலைகிறது! இன்னும் எத்தனை பேரைக் கொல்லலாம்! எத்தனை காலன் இரத்தத்தைக்குடிக்கலாம் என்று எதிர்பார்த்துக்கொண்டிருப்பதுபோல் இருக்கிறது, சர்க்காரால் கையாளப்படும் முறைகளைப் பார்க்கும்போது.

தூத்துக்குடியில் நாலுபேரைக் கொன்று குருதியைக் குடித்த சர்க்காருக்குத் தாகம் தணியவில்லை. இருபத்தைந்து பேரைக் காக்கை கொத்துவதுபோல் கொத்திக்காயப் படுத்தி, அக்காயத்திலிருந்து ஒழுகும் குருதியைக் குடித்து, அந்த 25 பேரையும் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிட்டு, மேலும் மேலும் இரத்த தாகம் எடுக்கவே, உடனே புறப்பட்டுக் கல்லக்குடிக்கு வந்து ஐந்து பேரைக் கொன்று அவர்களின் குருதியைக் குடித்து, அதற்கு மேலும் தாகமெடுக்கவே, தோழர் கண்ணதாசன் அவர்களின் எலும்பை முறித்து, அதற்குள் இருக்கும் மூளையை உறிஞ்சி உருசி பார்த்து, அதிலும் திருப்தி ஏற்படாமல், 35 பேரின் சதையைப் பிய்த்துத்தின்று, அவர்களையும் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிட்டு, மேலும் குருதி கிடைக்கும் என்ற ஆனந்தத்தோடு ஆட்சி புரிந்து கொண்டிருக்கிறது ஆச்சாரி சர்க்கார். இதனை

(16-ம் பக்கம் பார்க்க)

'புளுகுமணி'யின் 'கூத்து'

"எங்கோ போக இருந்தேன். வேண்டாம், இங்கே வாருங்கள் என்று கூறி அழைத்து வந்தீர்கள் வந்தேன்! என் வேலையைப் பார்க்கிறேன். நீங்கள் யாரும் குறுக்கிட்டு எந்தவிதமான யோசனையும் கூறத் தேவையில்லை. எல்லாம் எனக்குத் தெரியும். வேண்டுமானால் ஒப்புக்குத் தலையாட்டுங்கள். நான் ஏதாவது கூறினால் ஆமாம் என்று கூறுங்கள். அது போதும். அதற்குமேல் ஒன்றும் செய்யாதீர்கள். நான் எந்தக் காரியத்தைச் செய்தாலும், அது தவறோ, சரியோ, குறை கூறாதீர்கள். குற்றம் கண்டால் கண்ணையும் கருத்தையும் மூடிக்கொள்ளுங்கள். நான் செய்கின்ற காரியங்களில், நம்முடைய எதிரிகள் குற்றம் கண்டு குறை கூறினால் உங்கள் காதுகளை மூடிக்கொள்ளுங்கள். நான் இந்தப் பழக்கத்தை 1938 லேயே பழகிக்கொண்டு 'கேளாக் காதன்' என்ற பட்டத்தையும் பெற்றுள்ளேன். எனவே, நீங்கள் கையாட்களாகமட்டும் இருங்கள். நான் செய்யும் காரியங்களைக் கண்காணித்துக் கருத்துரை வழங்கும் கண்ணியத்தை, மறந்தும் மேற்கொண்டுவிடாதீர்கள்."

என்று கூறுவதுபோல், ஆச்சாரியார், தான், எந்தக் காரியத்தைச் செய்தாலும் அதை யாரும் தட்டிக் கேட்கவோ, தப்புக்கண்டுபிடிக்கவோ கூடாதென்ற முறையில் செய்துகொண்டு போகிறார்.

இப்போது கொண்டுவரப்பட்டிருக்கும் ஆரம்பக் கல்வித் திட்டமும் எவரையும் கலந்தாலோசித்துக் கொண்டு வரப்பட்டதல்ல. தான் தோன்றித்தனமாகக் கொண்டுவரப்பட்ட திட்டமாகும். நாடு முழுவதும் இத்திட்டத்தை எதிர்க்கிறது. காங்கிரஸ் வட்டாரத்திலேயே, சிறிதளவு அரசியல் அறிவும், உலக அனுபவமும் உள்ளவர்கள் அனைவருமே இத் திட்டத்தை எதிர்க்கிறார்கள். எந்தக் கட்சியையும் சாராத கல்வித் துறையில் ஆராய்ச்சியும், அனுபவமும் நிறைந்த பலரும் இத் திட்டத்தை எதிர்க்கிறார்கள். அதோ! இத்திட்டத்தை எதிர்த்து, நூற்றுக்கணக்கில் நாள்தோறும் சிறை சென்றபடி உள்ளனர் மக்கள்.

ஆனால், இவர்களை யெல்லாம் குறை கூறித் தங்களுக்கு மட்டுமே 'எல்லாம் தெரியும்' என்ற போக்கிலுள்ள சில 'பொறுக்கு மணிகள்' இருக்கின்றன. அவற்றிலே முதல் வரிசையில் வந்துநிற்கிறது, 'புளுகுவதைத் தவிர, வேறொன்றறியேன் பராபரமே' என்ற நிலையில் இருக்கும் 'தினமணி'! இது கூறுகிறது,

"விஷயமறியாத மக்களை உணர்ச்சி வசப்படுத்தித் தவறான வழியில் இழுத்துச் செல்வதற்குக் கட்டுப்பாடான முயற்சி செய்பவர்கள்."

என்று இத்திட்டத்தை எதிர்ப்பவர்கள்மீது சீறிவிழுகிறது 'தினமணி,' விஷயமறியாத மக்களை உணர்ச்சி வசப்படுத்தும் பழக்கம் யாருக்குத் தொன்றுதொட்டுள்ளது? காங்கிரசுக்கா? இதனை எதிர்க்கும் மற்றக் கட்சிகளுக்கா? என்பதைத் 'தினமணி' எண்ணிப் பார்க்க நேரமில்லாமல், இத்திட்டத்தை எதிர்ப்பவர்கள்மீது ஏன் சீறிவிழவேண்டுமென்று கேட்கிறோம்.

"இந்தச் சர்க்கார் செய்யும் எதுவும் நல்லதாக இருக்கமுடியாதென்று முன்கூட்டியே முடிவு கட்டி, எதனையும் சகட்டுமேனிக்கு எதிர்ப்பவர்கள் இருக்கிறார்கள்"

என்று மேலும் அந்தப் பொறுக்குமணி பேசுகிறது. இந்தச் சர்க்கார் கொண்டுவந்த சில நல்ல திட்டங்களை இந்நாட்டிலுள்ள அனைவருமே ஒருமனதுடன் வரவேற்றிருக்கிறார்கள் — பாராட்டியிருக்கிறார்கள். ஆனால், இந்தச் சர்க்கார் கொண்டுவரும் பல கவைக்குதவாத் திட்டங்களைச் சிலரல்ல, நாட்டு நலனிலும், பொதுமக்களின் நல்வாழ்விலும் அக்கறைகொண்ட அறிவாளிகள் அனைவருமே எதிர்க்கிறார்கள் — இந்தச் சர்க்காரின் 'தயவை' நாடிப் பிழைக்கும் நிலையிலுள்ள சிலரைத் தவிர, மற்றெல்லோருமே இந்தச் சர்க்காரின் நல்லதை ஆதரித்துக் கெட்டதை எதிர்க்கிறார்கள். இது 'தினமணி'க்குத் தெரியாவிட்டால், பழைய ஏடுகளைப் புரட்டிப் பார்க்கட்டும் — எதிர்க்கட்சிக்காரர்கள் இந்தச்சர்க்கார் செய்த எந்தெந்த காரியங்களை வரவேற்றுப் பாராட்டியிருக்கிறார்கள் என்பது தெரியும் அப்பொழுது புரியும், யார் விஷயமறியாத மக்களை உணர்ச்சி வசப்படுத்துகிறார்கள் என்ற உண்மை.

மேலும், இந்தப் புளுகுமணி கூறுகிறது, 15—7—53-ல நாம் செய்த காரியம் ஒரு நாள் கூத்தாம். ஆரியக்கூத்தாடினும் காரியத்தைச் சாதித்துக் கொள்ளும் கூட்டத்துக்கு நாம் செய்யும் காரியங்கள் எல்லாம் கூத்தாகத் தெரிகிறது போலும்!

ஒரு நாள், ரயில்களை நிறுத்தி, நமது கண்டனத்தை, நம்மை எல்லாம் "முட்டாள்கள்" என்று திமிரோடு கூறியநேரு சர்க்கார் அறியச் செய்தோம். அந்த ஒரு நாளிலேயே ஒன்பது பேரைச் சுட்டுக் கொன்று, அறுபது பேரை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி, ஆயிரத்துக்கு மேற்பட்டவர்களை இந்தச் சர்க்கார் சிறைக்குள் தள்ளி விட்டதென்றால், இந்தக் காரியம் தொடர்ந்து நடைபெற்றால், எத்தனைபேரைக் கொன்று குவிக்கும், எத்தனை பேரைக் கண்ணதாசனைப் போல் குற்றுயிராக்கிக் கும்மாளமடிக்கும், எத்தனை எத்தனை ஆயிரம் பேரைச் சிறைக்குள் தள்ளும் என்பதை நம்மீது சீறிவிழும் 'தினமணி' கணக்குப் போட்டுப் பார்த்தால், யார் செய்வது 'கூத்து' என்பது விளங்கும். இதை விட்டு வெந்த புண்ணிலே வேலைப் பாய்ச்சுவது போல், கொடுமையே வடிவெடுத்த இந்தச் சர்க்காரின் நடவடிக்கைகளால் வேதனைப்பட்டுக் கிடக்கும் உள்ளங்களை மேலும் கிளறி வேடிக்கை பார்க்க வேண்டாமென்று 'தினமணி'க்கு எச்சரிக்கை செய்கிறோம்.

நிறுத்தாதே

"வெற்றி வீட்டுக் கதவு
திறக்கப்படவில்லையோ!
அதனால் என்ன?
திரும்பிப் போவையோ!
இல்லை! தட்டு,
மீண்டும் மீண்டும் தட்டு
கதவு திறக்கப்படவில்லை
யாயினும்
தட்டுவதை நிறுத்தாதே!"

வங்கக் கீதம்.

மறந்துவிடாதீர்!

சுட்டுக் கொல்லப்பட்டனர், 9 பேர்.

படுகாயம் அடைந்துள்ளனர், 60 பேர்.

கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள், 1726 பேர்.

கொலை புரிந்த கொடுங்கோலர்களா, சுட்டுக் கொல்லப்பட்டார்கள்?

களவு செய்யப் புறப்பட்டவர்களா, படுகாயமடைந்தனர்?

கள்ள மார்க்கட் செய்தவர்களா—கள்ளக் கையொப்பமிட்டவர்களா—கள்ளச் சாராயம் காய்ச்சியவர்களா—கைது செய்யப்பட்டு காவலில் இருக்கின்றனர்.

இல்லை, இல்லை தமிழுக்குத் தாழ்வாகப் பேசி, தமிழரின் போராட்டங்களை துச்சமென மதித்து, 'முட்டாள் தனம்' என இழிச்சொல் வீசிய நேரு அறியட்டும் தமிழரின் கண்டனக் குரலை என்று ரயில் நிறுத்தப் போராட்டம் செய்யச் சென்றவர்களே.

சிங்கத் திருவிடத்தில் சிமிண்ட் முதலாளியின் பெயரா என்று கேட்டு, திராவிடத்தின் இழிவு நீக்க, டால்மியாவின் பெயர் கூடாதென அழிக்கச் சென்ற தோழர்களே.

ஆரம்பக் கல்வித் திட்டம் என்ற பெயரால், வர்ணாஸ்ரமத்தை இங்கே நாட்ட வந்திருக்கும் ஆச்சாரியாரின் எதேச்சாதிகார திட்டமான ஆரம்பக் கல்வித் திட்டத்தை எதிர்க்கச் சென்றவர்களே.

எந்த ஆட்சியில் இப்படிப்பட்ட அக்கிரமம். காட்டு ராஜாக்கள் ஆட்சியிலா?

ஆச்சாரியார் ஆட்சியில்—அகிம்சைப் பாதை வழியில் வந்தவர்களின் ஆட்சியில். ஜனநாயக ஆட்சியில். வெள்ளையனைப் பார்த்து, "ஏ வெறி பிடித்த ஏகாதிபத்யமே! தியாகத் தீயிலே தள்ளுகிறாய் தீரரை! நாட்டுப் பற்றுடையோரை. உரிமை உணர்ச்சியை அழித்து விடுவதாக எண்ணுகிறாய். ஆனால், அழிவது உணர்ச்சி அல்ல — அது தணலிலிட்ட தங்கமாகிறது—அழிகிறது உனது ஆணவம், உனது ஆதிக்கம்" என்று எச்சரித்த காங்கிரஸ் ஆட்சியில்.

என்ன, யார் என்ன செய்துவிட முடியும்? மாணிக்க வேலர்களும், விநாயகங்களும் என்னைப் போற்ற இருக்கிற வரையில் என்ற பெருமையில், இப்படிப்பட்ட அநீதிகளை, அக்ரமங்களை அநியாயங்களைச் செய்கிறார், ஆச்சாரியார்—இப்படிப்பட்ட பாதையில் சென்றவர்களை அன்னியப் பாராமலேயே

அழிவதற்கு முன் தினம் வரையில் அடால்ப் இட்லருக்கு, இந்நிலை தான் இருந்தது—கருத்தில் வெறி ஏறிக்கிடந்த ஜெர்மன் காளைகளுக்கு, பெர்லின் பித்தன், கண் கண்ட கடவுளாகவே இருந்து வந்தான்.

முசோலினிக்கும், இத்தாலிய நாட்டு மக்களின் பேராதரவு இருந்து வந்தது.

பழங்கதை ஏன், இதோ இன்று ஆப்பிரிக்காவிலே டாக்டர் மலானுக்கு. மிக மிகச் செல்வாக்கு—தங்களின் உயர்வுக்கு உழைக்கும் உத்தமர், மலான் என்றே ஆப்பிரிக்க மக்கள் எண்ணுகிறார்கள்

ஆனால், உலக மன்றத்திலே, நீதி நேர்மையை மதிப்பவர் முன்பு, அறநெறி அறிந்துரைப்போரின் அவையிலே, அடால்ப் இட்லர், இத்தாலிய இரும்பு உள்ளத்தான் முசோலினி, மறுமுறை கண்ட மலான், ஸ்பானியச் சர்வாதிகாரி பிராங்கோ ஆகியோர்கள், கொடியர்கள் என்றும், கோணல் நடையினரென்றும் வெறியரென்றும், மக்களின் உரிமையைச் சூறையாடும் துஷ்டர்கள் என்றும் கூறப்படுகிறதே ஒழிய, அவர்கள் தத்தமது நாட்டவரின் ஆதரவை அளவற்ற முறையிலே பெற்றவர்கள், ஆகவே, அவர்கள் செயல், சீலம் மிக்கது, போக்கு, புனிதமானது, அவர்களை மாநிலம் மதித்திட வேண்டும் என்று எவரும் கூறவில்லை.

பொதுமக்களின் பேராதரவு தனக்கு இருப்பதாக இறுமாந்திருக்கிறார், ஆச்சாரியார். இருக்கட்டும்—பெற்றுள்ள பேராதரவுக்குப் பழுது நேரிடாவண்ணம் பக்குவமாகப் பாதுகாக்கும் திறமிருக்கலாம். ஆனால், இவை இருக்கிற காரணத்தாலேயே, தனது செயல்கள், சிலாக்கியமானவைகளாக இருந்தே தீரும் என்று வாதிடுவது சரியல்ல—அக்கிரமச் செயல்களைப் புரிவதும் நியாயமல்ல நெஞ்சு கொதிக்கும் நீசக் காரியங்களைச் செய்துவிட்ட தனக்கு, ஆலவந்தார் பட்டம் ஆதரவு அன்று எண்ணிவிட்டார்போலும். பட்டம் விலையானது அல்ல. அது இருப்பதாலேயே, குரங்கின் குரலில் குயிலோசை இருப்பதாகக் கூறினாலும், வெள்ளரியிலே மாங்கனியின் சுவை உண்டென்று கூறினாலும், அல்லியைத் தந்து இந்த மல்லியின் மணத்தைப் பார் என்று கூறினாலும், நாடாள்வோர் கூறுகின்றனர்; எனவே, ஆமென்று கூறித்தான் ஆகவேண்டும் என்று மக்கள்—அதிலும் மதி என்னும் நிதியை இழக்காதவர்கள் தீர்மானிப்பர் என்று எண்ணுகிறார் போலும். 'கோல் கொண்ட இவனுக்கு. ஏன் இந்தக் கோமாளிப் புத்தி! நாடாள வந்தவனுக்கு, ஏன் இந்த நாச நினைப்பு! அரசாள வந்தவனுக்கு ஏன் இத்துணை அறிவுச் சூன்யம்!' என்றுதான் எண்ணுவர், மக்கள்—நெஞ்சில் உரம் உள்ளோர், விளைவுபற்றியும் வேதனைபற்றியும் கவலைப்படாமல் வெளிப்படையாகவே, கூறவும் செய்வர்.

எமது பேச்சை மறுப்பவரை — எதிர்ப்பவரை — வேரறுக்கும் ஆற்றல் எமக்கு உண்டு என்று எதேச்சாதிகாரச் செயல்களை எள்ளளவும் ஈவுஇரக்கமில்லாமல் செய்து காட்டுகிறார், ஆச்சாரியார். கோல்கொண்டோருக்கு இந்த அதிகாரம் உண்டென்பதை தெரிந்திருக்கிறோம். ஆனால், கொள்கையைக் கூறும் பொழுது, கோல்கொண்டோர் கொதித்தெழுந்து கொடுமை செய்யும் ஆற்றல் பெற்றிருக்கிறார்கள் என்றால், கொள்கைக்காக கஷ்ட நஷ்டங்களையும் ஏற்றுக்கொள்ளும் திடமனம், தியாக உணர்ச்சி, எம்மவருக்கு உண்டு. பதவி பெற்றவர்கள், எம்மை எத்தகைய பயங்கரப் பலிபீடத்துக்கு இழுத்துச்செல்லத் துணிந்தாலும். துணிபவரின் துடுக்குத்தனத்தை தூளாக்கும் அளவுக்கு எமக்கு பலம் இல்லை எனினும் அந்தப் பலிபீடத்தில் 'தலை'யாகிவிட எமக்கு நெஞ்சுரம் உண்டு—ஆற்றல் உண்டு என்பதை இப்பொழுதாவது உணர்ந்துகொண்டீரா? கோலும் அதிகாரம் பெற்றீரே, எமக்.

குச் சாகத் தைரியம் உண்டு! சிறையிலிடும் அதிகாரம் பெற்றேரே, அதை ஏற்ப எம்மால் முடியும்! அடக்குமுறை வீசிடும் ஆற்றல் பெற்றேரே, அதனை அமைதியுடன் ஏற்றுக்கொள்ளும் திறம் எமக்கு உண்டு என்பதை அறிந்துகொண்டீரா—இன்றுவரை. வெறியரின் கொட்டத்தை அடக்க, வெறிச் செயலால்தான் முடியும் என்று எண்ணுகிர் — வெறியரின் கோபத்துக்கு இரையாகி, அடக்குமுறைக்கு அஜீரணம் உண்டாக்கும் அளவுக்கு, அதன் கோரப்பற்களுக்கிடையே புகுந்து பலியாகும்பண்பு, வெறியரின் போக்கை நிச்சயம் மாற்றக்கூடியது. வெட்ட, குத்த அல்ல: வெட்டுக்கும் வேட்டுக்கும் மார்பை காட்டும் மாண்பினைக் காட்டுவதன் மூலம், தமிழகத்தின் தனிச்சிறப்பினை நிலைநாட்டியே தீருவோம். எமது உடலில், அடக்குமுறையால் உண்டாக்கும் தழும்புகளைக் கண்டு, வெட்கித் தலைகுனிந்து, வெறிச் செயலை விட்டுவிட எண்ணுவீர் — அந்த அளவுக்குக் கொடுமைகளை வரவேற்கத் தயாராகிவிட்டோம். உமது ஆசையும் தீர்ந்துபோகட்டும்.

சுட்டுக்கொன்றாய், ஒன்பது பேரை, அந்த ஒன்பதுபேரின் குடும்பங்களையும் ஒரு விநாடி உன் மனக்கண் முன்னால் கொண்டுவந்து நிறுத்திப்பார். அவர்கள் உன்னைத் திருப்பிச் சுடப்போவதில்லை. ஆனால், அவர்கள் கண்களிலிருந்து சுரக்கும் கண்ணீர், உன் ஆட்சியைச் சுட்டுப் பொசுக்கிவிடும் தன்மையது என்பதை மறவாதே. கொல்லைப்புறமாக வந்த, 'குல்லூக பட்டர்' என்ற பட்டப் பெயரைச் சூட்டிக்கொண்ட ஆச்சாரியாரே, உன் கொடுமைக்கு இவர்கள் போதுமா? இன்னும் தேவையா?

இரத்தம் ஒழுகும்படி அடித்தாய்; இலட்சியத்துக்காகத் தரும் விலை என்று எண்ணிக்கொண்டார்கள், தோழர்கள். அதனால் உன் கண்ணியம் எவ்வளவு தூரம் காற்றில் பறக்குது பார்த்தாயா!

சிறையில் அடைத்துவைத்திருக்கிறாய் தோழர்களை. கடமையைச் செய்துள்ளோம் என்ற களிப்புடன் காட்சிதரும் நிலையினைப் பார்.

மக்கள் வாழவேண்டுமென்ற மாண்புள்ள நோக்கம் கொண்டோரே! பெருங்குடிமக்களை உரிமை வாழ்வு வாழச்செய்வதுதான் அறம், அதுதான் அறிவுடைமை என்ற பெருநோக்கம் கொண்டோரே! உலகெலாம் முன்னேறிய இக்காலையும் இந்நாடு மட்டும் சேரிவாழ் பாதி மனிதர்களும், சந்தனச்சேறு நிரம்பிய மார்பினரும் கொண்டதோர் விசித்திரக் காட்சிச்சாலையாக இருப்பானேன்? இந்த வேதனையைத் துடைப்போம்; விரப்போர் புரிவோம், என்று வீறுகொண்டெழுந்த மக்களைச் சிறையிலே தள்ளியிருக்கிறது, 'மனுநீதி' சர்க்கார். இது சரிதானு! நெஞ்சிலே கைவைத்து, நேர்மையில் நாட்டம் வைத்து, உள்ளதை மறைக்காது, ஊறு நேரிடுமோ என்று அஞ்சாது கூறுமின்!

ஆச்சாரியாரின் பழமைப் பித்தம், வர்ணாஸ்ரம வெறி, சனாதனச் சாகசம் நாட்டை வாழவா வைக்கும்? அவர் புகுத்துவது, கல்வி முறையிலே புதிய திட்டம் அல்ல-அந்தப் பெயரால் அவர் புகுத்த எண்ணுவது, வர்ணாஸ்ரமத்தை - அக்கிரகார ஆதிக்கத்தை-ஆரியத்தை — தன் இன சந்ததிக்கு வாழ்வளிக்கும் திட்டத்தை.

மண்டியிடும் மாணிக்கவேலர்கள்தான் உள்ளனர் என்ற மமதையில் இத்தீய திட்டத்தை கட்டாயமாகக் கொண்டு வருகிறார். எட்டியை சீனிக்கட்டி என்று சற்றும் கூசாது கூறுகிறார், குல்லூகபட்டர்.

அறிவாளர்களை, கல்வி நிபுணர்களை, பகுத்தறிவாளரை பிற்படுத்தப்பட்ட சமூகத்தினரை, ஆச்சாரியார், முகத்திலே காரி உமிழ்ந்து வலிய வம்புக்கிழுக்கிறார்—எதிர்ப்பவர்களை எதேச்சாதிகாரத்தோடு — எக்களிப்போடு — சிறையில் பூட்டுகிறார்.

காங்கிரஸ் எம். எல். ஏ.க்களே! உங்கள் பின்சந்ததியைக் கருகவைக்கும் திட்டத்தை நீங்கள் கை தூக்கும் பொம்மைகளாக இருக்கும் காரணத்தால் உங்களைக் கேளாமலேயே கொண்டுவந்துவிட்டார். உங்கள் சந்ததிக்கும் சேர்த்துவாதாடும் எங்களை சிறையில் பூட்டுகிறார். எண்ணிப் பாருங்கள்—ஏன் இந்த ஆகாத திட்டத்தை இவ்வளவு அவசரமாக விடாப் பிடியாகக்கொண்டு வருகிறார்—என்பதை. தன் இனத்தவர், குனியாமல், வளையாமல் குதூகலத்தோடு, வாழ. ஆனல், நீங்கள், உங்கள் இனத்துக்கு உங்கள் பின்சந்ததிக்கு என்ன தேடி வைக்கிறீர்கள்? கொடுமை! தீராத பெருங் கொடுமையைத் தேடி வைக்கிறீர்கள்.

அடக்குமுறையை அவிழ்த்துவிட்டிருக்கிறார், ஆச்சாரியார்- அதற்குத் துணைநின்று பல்லவி பாடுகிறீர்கள், நீங்கள். இத்தகைய ஜனநாயக ஆட்சிமுறை, ஆளவந்தார்களை அவர்களின் பீடத்தினின்றும் அகற்றுவதற்கே துணை செய்யுமன்றி, இதனால் அவதிப்படுவோரை ஒன்றும் செய்துவிடமுடியாதென்பது வரலாறுகள் கற்பிக்கும் பாடத்தினை எண்ணிப் பாருங்கள்.

வெள்ளையன் இந்த நாட்டைவிட்டு வெளியேறு முன்பு நீங்கள், என்ன கூறினீர்கள். அவனை-என்று எண்ணிப்பாருங்கள். அடக்குமுறையை அள்ளி வீசுகிறான், அன்னியன். ஆகவே, அவனை உடனே நாட்டைவிட்டு ஓட்டவேண்டும். இல்லாவிடில் நம் அல்லல்கள் அகலாது என ஆயிரமாயிரம் மேடைகளில் அண்டமதிரக் கூவினீர்கள்-அவனைக் கண்டித்தீர்கள். இத்துடன் மட்டும் நின்றுவிடவில்லை, நீங்கள். நம் ஆட்சியாய் இருந்தால், எழுத்துரிமை, பேச்சுரிமை முதலிய எந்த உரிமையும் பறிபோகாதது மட்டுமல்ல, நாட்டு மக்களுக்குத் தேவையானதை, அவசியமானதை ஏற்படுத்திக்கொள்ள முடியும், ஆனந்தத்தோடு வாழமுடியும் என்றீர்கள். ஆனால், அன்று கதறியதை எல்லாம் காற்றில் பறக்கவிட்டுவிட்டு, வெள்ளைக்காரனைவிட வேகமாக ஓடுகிறீர்கள்—அடக்குமுறைச் சட்டங்களை அளவுகடந்து வீசுவதன் மூலம். இதனால், ஒன்று புலப்படுகிறது, இப்படிப்பட்ட அடக்குமுறையை வீசி அனேக காலம் நீங்கள் ஆட்சியில் அமர்ந்திருக்கமுடியாது, அதி சீக்கிரத்திலேயே அவ்வாசனத்திலிருந்து அகற்றப்படுவீர்கள் என்பதை மறந்துவிடாதீர்.

நீங்கள் கடந்துவந்த பாதையை எண்ணிப் பாருங்கள். எண்ணிப் பார்க்காவிட்டாலும் காலம் உங்களுக்கு அதனை விரைவில் உணர்த்திவிடும் என்பதை மறந்துவிடாதீர்.

★

வர்ணசிரமத்தை வளர்க்கும் திட்டம்!

கடைசி காலத்தில் கடைசி முயற்சி

போர் தொடுத்துவிட்டோம்

பயணம் நிற்காது!

பொதுமக்களின் ஆதரவோடு அதிகாரத்துக்கு வந்த ஒருவரிடம் தான், பொதுமக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய திட்டங்களை எதிர்பார்க்க முடியும். தெருவழியே போய்க்கொண்டிருப்பவனுக்கு எதிர்பாராத விதமாய்த் திரவியம் கிடைப்பதுபோல் ஒருவனுக்கு அதிகாரம் கிடைத்துவிட்டால், அந்த அதிகாரத்துக்கு ஆணவம் தான் துணையாக முன்வந்து நிற்குமேயொழிய, அன்போ, அறிவோ துணையாக வராது—வந்தாலும் ஆணவத்தின் அட்டகாசத்தால் அவை அகன்றுவிடும். தான் தோன்றித் தம்பிரானாகிவிடுவான் அந்த அதிகாரி. தனக்கு எதுசரியென்றுபடுகிறதோ, அதைச் செய்ய முனைவானேயன்றிப், பொதுமக்களுக்கு எது நன்மையென்று யோசித்து எதனையும் செய்யமாட்டான். இன்று அதிகாரத்தில் அமர்ந்திருக்கும் ஆச்சாரியாரும் இந்த நிலையில்தான் இருக்கிறார். பொதுமக்களின் ஆதரவை இழந்து புதுப்பாளையம் போகும் தருவாயிலிருந்தவரைக் கொல்லைப்புற வழியாக அழைத்துவந்து ஆட்சிப்பீடத்தில் உட்காரவைத்ததும், தனக்கு நிகர் தரணியில் யாருமில்லை என்ற போக்கில் காரியங்களைச் செய்துகொண்டு போகிறார். மடியும் தருவாயில் இருக்கும் வருணாசிரமத்துக்குப் புத்துயிர் அளிக்கப்பார்க்கிறார்.

கட்டு தளர்ந்துவிட்டது! கைகால்கள் சருகென உலர்ந்துவிட்டன. குத்து ஒன்றுக்கு குப்புற ஆள் கீழே விழுந்த காலத்தை எண்ணி 'போனது வராது' என மாஜி போக்கிரி மரத்தடியில் உட்கார்ந்து யோசிக்கிறான்.

கண்ணாடி எங்கே இருக்கிறது என விநாடிக்கொருமுறை தேடித் தேடி முகத்தைப் பார்த்து அந்த மினுமினுப்பையும் சொகுசையும் கருத்து வளைந்த புருவங்களையும் கண்ணாடிபோன்ற கன்னங்களையும் குவிந்து கொஞ்சும் அதரத்தையும் சுருண்டுவளைந்த கூந்தலையும் கண்டு கண்டு களித்த காலம் போய், கண்ணாடியைக் கண்டால், முகத்தின் சுருக்கமும் கன்னத்தின் குழியும் உதட்டின் வரட்சியும், கூந்தலின் வெளுப்புமே தெரியுங்காலம் வந்ததும், அலங்கார மேனாமினுக்கி, "நாம் அழகாக இருந்த காலம் போயிற்றே போனது வராது" என எண்ணுகிறாள்.

பலமிழந்த போக்கிரி, பக்கத்திலே சில குட்டி வஸ்தாதுகளைச் சேர்த்துவைத்துக்கொண்டு, பழம் பெருமை போனாலும், அடியோடு காரியம் கெட்டுவிடாதபடி பார்த்துக்கொள்ளலாமென்று நினைக்கிறான்.

வயது முதிர்ந்துவிட்டதால் வசீகரம் வதைக்கப்பட்டபோதிலும், சிதைந்த சிங்காரத்துக்குச் சில்லறைச் சொகுசுகள் செய்து, விகாரம் அத்தனையும் வெளிக்குத் தெரியவொட்டாது, அலங்காரி தடுக்கிறாள்.

அதுபோலத்தான் வர்ணாஸ்ரமும் இன்று இருக்கிறது. அதற்கு எதிர்ப்பு இல்லாத காலம் போய்விட்டது. கண்டால் கிடுகிடுவென மக்கள் நடுங்கும் காலம் போய்விட்டது. இப்போது எங்கும் இடி, கண்டனம், தாக்குதல் என்றாகிவிட்டது. எனவே வர்ணாஸ்ரமம் பழங்காலப் போக்கிரி படை சேர்ப்பது போலவும், அந்நாள் அலங்காரி அழகுப் பூச்சுகளை நம்புவதுபோலவும், தேசியத்தை நம்பி அதை மூலாமாகக் கொண்டு மினுக்கிப் பார்க்கிறது. பகுத்தறிவுக் கண்கொண்டு பார்ப்போருக்கு, அந்த மூலாம் எதன் மீது பூசப்பட்டிருக்கிறது என்பது விளங்கும். காலத்தின் போக்கை உணர்ந்தோருக்கு இனி ஒருநாளும் அந்த வர்ணாஸ்ரமம் பழையபடி நிலைத்து நிற்காது என்பது விளங்கும். மக்களின் எழுச்சி எவ்வளவு தான் மங்கும்படி செய்யப்பட்டாலும், அடங்காது. அந்த எழுச்சியின் முன்பு, எதுதான் நிற்கும்? ஜார் நிற்கவில்லை! பிரஞ்சு குபேரர்கள் நிற்கவில்லை! கொடுங்கோலர் யாருமே நிற்கமுடியவில்லை குப்புற விழுந்தனர்! வர்ணாசிரமும் வீழும் கீழே. தவிடு பொடியாகும். மீண்டும் உருப்பெற்று எழமுடியாதபடி அழிக்கப்படும் என்பது உறுதி.

என்றபோதிலும் அன்பர் ஆச்சாரியார்—அல்ல, அல்ல! அடக்குமுறையை அவிழ்த்துவிட்டு, ஆணவத்தை அதிகார பலத்தால் பெற்றுள்ள அட்டகாச ஆச்சாரியார், மீண்டும் வர்ணாசிரமத்தை அரியணையில் உட்காரவைக்கப் பார்க்கிறார். ஆரம்பக்கல்வித்திட்டம் என்ற பெயரால் வர்ணாசிரமம் தலைதூக்கப் பார்க்கிறது.

இதனை நாம் பார்த்துக்கொண்டு வாளா இருப்போம் என்று ஆச்சாரியார் எண்ணினார்! ஆனால் அவர் எண்ணம் பலிக்கவில்லை. எங்கு பார்த்தாலும் எதிர்ப்புக் கிளம்பிவிட்டது. எப்படிச் சமாளிப்பது என்பதே தெரியாமல், மலபார்ப் படை போதுமா? தேவைப்பட்டால் கூர்க்கப்படையையும் தருவிக்கலாமா என்ற நிலை பிறந்துவிட்டது.

பலமிழந்த பயில்வானைப்போல்—வனப்பிழந்த வனிதையைப்போல்

ஆச்சாரியாரும் தம்முடைய கடைசிக் காலத்தில் வருணாசிரமத்தை நிலைநாட்டுவதற்குக் கடைசி முயற்சியாக இந்த ஆரம்பக்கல்வித் திட்டத்தைப் புகுத்துகிறார்.

ஆச்சாரியார் பார்வைக்கு!

கடமையைச் செய்வதிலே எஃகு போன்ற உள்ளமும் நீதி வழங்குவதிலே துலாக்கோல் போன்ற மனோநிலையும், எளியோர் விஷயத்தில் இளகிய மனமும் இருத்தல் வேண்டும், ஒரு ஆட்சி பிறரால் போற்றப்பட வேண்டுமானால். ஆட்சிக்கு வருவதற்கு பக்குவமும், பக்குவத்தைப் பிறர் உணரும் விதத்தில் நடத்தையும், ஆட்சியை அடைவதற்காக நேர்மையான முறையும் கையாளப் படவேண்டும் என்பதை மக்களின் நலனைக் கோரும் யாவரும் ஒப்புக்கொள்வர்.

ஆட்சியைப் பிடித்து, அட்டகாசமாக வாழ்ந்தவர்களையும், அவதி பல தந்து பின்னர் அழிந்த பலரின் சேதியையும், சரித்திரம், ஆள வருவோருக்கு வழிகாட்டியாக நின்று உரைக்கிறது.

ஆட்சிக்கு வருவதென்பது அவ்வளவு கடினமானதல்ல! சதி பல புரிந்து, பட்டத்து வாரசுகளைச் சிதைத்து, பலர் மன்னர்களாயினர்: மன்னர்களை மயக்கி ஒழித்து மந்திரிகள் பலர் முடிசூடினர். மன்னரையும் மந்திரியையும் ராணுவத்தைக் கொண்டு மிரட்டி, பல படைத்தலைவர்கள் பீடத்து அமர்ந்தனர். ஆனால் யாரார், சதி செய்து அரசாளும் நிலை எய்தினரோ அவர்கள் பெரும்பாலும், சதி புரிந்தே கடைசிவரை வாழவேண்டி வந்தது. அவர்கள் ஆட்சியில், நீதி, நேர்மை, எளியார் மாட்டு இரக்கம், இருப்பதில்லை. அட்டகாசமாக ஆள்வதும், அகப்பட்டவரை அழிப்பதும் அவர்கள் தொழிலாக இருந்தது. ரத்தம் தோய்ந்த கையுடன் சிங்காதனம் ஏறியவர்கள், ரத்தக் குழியிலேயே தமது உடலைப் போட்டு மாள்வர், என்பதைச் சரிதம் சாற்றுகிறது. சூது சூழ்ச்சி வஞ்சனை, ஒரு சமயத்தில் வெற்றி தரும். ஆனால் அவ்வெற்றி, நிலைக்காது. ஆணவமாகச் சில நாள் ஆடவும், கொடுமையாகச் சில காலம் ஆட்சி புரியவும் உதவுமேயொழிய, உலகம் போற்ற, அறிஞர் புகழ, அனைவரும் வாழ்த்த அவர் தம் அரசு இராது அவர் முடிவு கேட்டு, "போயினார்," என்று பெருமூச்சு விட்டு, ஆறுதல் அடைவர் மக்கள். கண்ணீர் விடார்!

விபீஷணர்கள் வளர்கிறார்கள்

யார் இருக்கிறார்கள் அவர் போக்கைத் தடுக்க. அவருடைய 'திருஷ்டி' தம் மீது பாய்வதே 'இகபரசுகம்' என்று எண்ணிக் காலங் கழிக்கும் ஏமாந்த பேர்வழிகள், 'கனம்' மெம்பர்களாக இருக்கும்போது அவருக்கென்ன குறைச்சல்.

மாணிக்கவேலர்களும், விநாயகங்களும், பக்தவச்சலங்களும் நமது நாட்டில் உற்பத்தியாகிக் கொண்டிருக்கும் வரையில், யார் என்ன சொன்னாலும், அதை அவர் கேட்கமாட்டார். ஆச்சாரியாரால் கொண்டுவரப்பட்டிருக்கும் புது ஆரம்பக்கல்வித் திட்டத்தைக் காமராசர் கண்டிக்கிறார், ஓமந்தூரார் வெறுக்கிறார், டாக்டர் சுப்பராயன் கூடாதென்கிறார், என்ற போதிலும் விடேன் என்கிறார்—விபீஷணர்களின் எண்ணிக்கை அதிகமாகிறது, எனக்குப் பயமில்லை என்கிறார்.

எனவே தான் அவர் மிரட்டுகிறார்! ராணுவ அதிகாரிகள் துப்பாக்கி முனையைக் காட்டித் தமது காரியங்களைச் சாதித்துக் கொள்வதைப் போல கனம் ஆச்சாரியார், தமது கோபாக்னியிலே கோடிப் பொருளையும் பொசுக்கித் தள்ளிவிட எண்ணுகிறார்.

ஆயிரமாயிரம் ஆண்டுகளாக இந்நாட்டுப்பழங்குடிமக்களாகவாழ்ந்து, ஆண்டு, நாட்டைக் காத்து, நிலத்தைப் பண்படுத்தி, பாதுகாப்புப் பட்டாளமாக உள்ள மக்களை, ஒதுக்கி, அழுத்தி, மிதித்து, மாக்களினும் கேடாகமதித்து, ஊருக்குப் புறம்பே, நாகரீகத்துக்கு வெளியே சேற்றிலே, புழுதியிலே, வாழ்ந்து வரச் செய்தும், சண்டாளன், இழிந்தவன், என்று இழிபட்டம் தந்தும், பார்த்தால் பாபம், தொட்டால் தீட்டு, நடந்தால் குற்றம் என்று 'தர்மம்' வகுத்தும், தெருவிலே நுழையவும், குளத்திலே நீர் மொள்ளவும், பள்ளியிலே படிக்கவும், கோயிலிலே நுழையவும், முடியாதபடி அடக்கி ஒடுக்கிய வைதீக வர்ணாஸ்ரம வன்னெஞ்சர்களைப் பார்த்தா கனம் ஆச்சாரியார் மிரட்டினார்? அவர்கள்மீதா கடுமையானநடவடிக்கை எடுப்பேன் எனப் பேசினார்? அல்ல! அல்ல! ஆச்சாரியார் அங்கு காட்டவில்லை தமது வீரத்தை.

ஆனால் சமுதாயம் சீர்பட, மனிதாபிமானம் நிலவ, நீதி ஓங்க, பழி துடைக்கப்பட, பாடுபடும் சீர்திருத்தக்காரர்கள், மீது, சீறி விழுகிறார்! முகம் சுளிக்கிறார்! மிரட்டுகிறார் முதலமைச்சர். தம்மிடம் சட்டமும், செந்தலைப்படையும், சிறைக்கூடத்தின் சாவியும் இருப்பதை எடுத்துக் கூறுகிறார்.

யார், தெரியுமா?

கல்விச்சாலைகள் நாட்டில், உண்டு ஆனால் நம்மவருக்குக் கல்வியில்லை. செல்வச் சாலைகள் செந்தமிழ் நாட்டிலுண்டு, ஆனால் நமக்கு செல்வமில்லை. உத்தியோக மண்டலம் உண்டு, ஆனால் உள்ளே நுழையும் மார்க்கம் நம்மவருக்கில்லை. ஊரில் இருப்பவர் நம்மவர், ஊரை வளம் பெறச் செய்பவர் நம்மவர், ஆனால் ஊராள்பவர் நம்மவரல்ல. கொட்டிக் குவித்த பொன்கிடக்க பசித்து ஒருவன் பக்கத்தில் கிடந்ததைப் போல நமது நாட்டிலே நாம், நலன்கள் ஒருபுறம் குவியல் குவியலாக இருக்க, நலனற்று, நாதியற்று, நம்பிக்கையுமற்று, வாழ்ந்தோம்.

கல்வியில் வல்லவராகவும், செல்வத்தைத் திரட்டுவோராகும் செந்தமிழ் நாட்டிலே "சிலர்களாகவும்" உத்தியோகத் துறையிலே ஊடுருவிப் பாய்ந்தும், நாட்டு நடப்பின் கர்த்தாக்களாய், அரசாளும் அண்ணல்களாய்' ஆண்டவனின் திருத்தூதராய், மோட்சத்துக்கு வழி காட்டிகளாய், தேவனின் திரு அருள் வாங்கித்தரும் தரகர்களாய், உயர் ஜாதிக்காரராய் உல்லாச வாழ்வினராய், வாழ்ந்து வருபவர் யார்? தெரியுமா?

மறந்து விடக் கூடாது

இன்று நம் நாட்டிலுள்ள பிரச்சினை கல்வியை எப்படி பரப்புவது? எவ்வளவு விரைவில் பரப்புவது? எந்த விதமான பயனுள்ள கல்வி தேவை? என்பதுதான். நாட்டின் தற்குறித் தன்மையை நீக்காது, நானாவிதமான திட்டங்களை அரசியல் வாதிகள் ஏட்டில் எழுதி வைத்துக்கொள்வதும், எடுத்துக் காட்டி விளக்குவதும் வீண்.

முடி அரசு இருந்த நாட்களிலாவது, நாட்டிலே தற்குறித் தன்மை இருப்பினும் கவலையில்லை என்றிருக்கலாம். அரசன் முற்று முணர்ந்தவன்—முழு அதிகாரம் கொண்டவன் — கொற்றவனும் கடவுளரும் உறவினர்—ஆண்டவனின் அருள் பெற்றோனே அரசன்—அரசனை எதிர்த்து ஏதொன்றும் செய்ய இயலாது—செங்கோலுக்கு மிஞ்சியது எது — என்று மக்கள் நம்பி வாழ்ந்த காலமது. ஊரை யார் ஆண்டாலென்ன என்றிருந்த காலம். அந்தக் காலத்து மக்களும் மன்னரும், அடிமை ஆண்டையாக இருந்தனர்.

குடிஅரசோ அப்படியன்று, நாடாளும் உரிமை நமக்குமுண்டு, அவருக்குமுண்டு, எவருக்குமுண்டு என்ற கொள்கையே குடி அரசு. எனவே, நாடாள யார் வரினும், எது செயினும், மற்றையோர், நமக்கென்ன என்றிருக்க முடியாது — கூடாது. இருப்பாரேல், படாதபாடு படவேண்டி நேரிடும்.

சுதந்தரம்—சதா விழிப்பாக இருப்பது எனும் விலை கொடுத்துப் பெறவேண்டிய சரக்கு — என்றார் அறிஞர்.

விழிப்பு என்பது தூங்காதிருக்கும் தன்மையைக் குறிப்பிடுவதல்ல! அறிவைக் குறிப்பிடுவது. அதனால்தான், குடி அரசு ஒரு நாட்டிலே நிலைத்து நின்று நற்பணியாற்ற வேண்டுமாயின் அந்நாட்டிலே கல்வி பரவியிருத்தல் அவசியம். கல்வி இல்லா நாட்டிலே குடி அரசு இருப்பது, இடிந்துபோன மாளிகையிலே மறைந்து கிடக்கும் மணிக்கும், துவண்டுபோன செடியிலே தொங்கும் பழத்துக்கும் ஒப்பாகும்.

இன்று நம் நாட்டிலே குடிஆட்சியின் முக்கியமான பகுதியாகிய சுயாட்சி நடக்கிறது. மக்கள் மந்திரிகளைச் சமைக்கிறார்கள். மக்களிடம் அரசாளும் ஆயுதமும், அரசாள்வோரை ஆட்டிவைக்கும் ஆயுதமும் இருக்கிறது. ஆனால் அதன் அருமையைத் தெரிந்து, பெருமையை உணர்ந்து, உபயோகிக்க வேண்டுமே! அதற்கு கல்வியின்றி முடியுமா? முடியாது. என்பதனை எல்லோருமே ஒப்புக்கொள்வர். ஆனால், எந்த விதமான கல்வி தேவை என்பதை நாடாளவந்தவர்கள் உணர வேண்டும்—அவர்களை உணரச்செய்யும் பொறுப்பை மக்கள் தங்களுடைய ஆதரவால் குறிப்பிட்ட சிலருக்குவழங்கியுள்ளார்கள். அவர்கள் அந்தப்பொறுப்பை உணர்ந்துகாரியமாற்ற வேண்டும். சட்டசபையிலே கொலுவிருப்பதும், தூங்குவதும், படி வாங்குவதும்தான் தங்களுடைய வேலையென்று இருந்துவிடக் கூடாது. பொதுமக்களின் பிரதிநிதிகளாகவே இங்கு நாம் வந்திருக்கிறோம் என்பதனை, அங்கே சுற்றிக் கொண்டிருக்கும் மின்விசிறியையும், வெல்வெட்மெத்தையையும்பார்த்தவுடன் மறந்துவிடக்கூடாது. இப்போது ஆச்சாரியாரால் கொண்டுவரப்பட்டிருக்கும் ஆரம்பக் கல்வித் திட்டம் நாட்டுக்கு ஏற்றதுதானா? என்பதனை ஆராய்ந்து பார்க்க வேண்டும். பொதுமக்கள் அதனை விரும்புகிறார்களா? வெறுக்கிறார்களா என்பதனை அறிந்து, ஆளவந்தோருக்குக்கூறவேண்டும். இதனைச் சட்டசபையில் வீற்றிருக்கும் பொதுமக்களின் பிரதிநிதிகள் மறந்துவிடக்கூடாது.

பார்த்துக் கொண்டிருப்பதா?

ஒரு நாட்டிலே நடந்த புரட்சியும், சிந்திய இரத்தமும் பிற நாடுகளுக்கு எச்சரிக்கையாகும். ஜனநாயக ஆட்சி நடக்கிறதென்று கூறு முன்னர் நமது நாட்டிலே சமத்வம், சுதந்தரம், சகோதரத்துவம் இருக்கிறதா — இவைகள் இருக்கும்படியான எண்ணம் நமது மக்கள் உள்ளத்திலே புகுத்தப்பட்டுள்ளதா என்பதை அறிஞர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்.

வர்ணாஸ்ரமம் என்று நம்மிடையே புகுத்தப் பட்டதோ அன்றே சமுதாயம் சீர்குலைக்கப் பட்டது. பிறப்பினால் உயர்வு தாழ்வு உள்ளவரையில் சமத்துவம், எங்கிருந்து வரும்? வளப்பமற்ற வயலிலே செந்நெல் முளைக்குமா? எட்டியைச் சுவைத்து இனிப்பைக் காண்போமா? வர்ணாஸ்ரமத்தை வைத்துக்கொண்டு, ஜனநாயகத்தைத் தேடுவதா? முடியுமா? நடக்குமா? அது அறிவுடைமைதான் ஆகுமா?

உலகிலே எங்கும் காணாத கொடுமைகளை இந்த நாட்டில் காண்கிறோம். மனிதனை மனிதன் அரசியல் அதிகாரத்தால் அடக்க முடிகிறது சர்வாதிகார நாடுகளிலே. மனிதனை மனிதன் செல்வத்தினால் ஆட்கொண்டு அடிமையாக்க முடிகிறது. ஆனால் இங்குதான் பிறவற்றால் உயர்ந்தவனாயினும், கல்வி கேள்வி, செல்வம் செல்வாக்கு, ஒழுக்கம் ஆகியவைகளிலே சிறந்தவனாயினும், ஒரே ஒரு ஜாதியான் முன் அவன் அடங்கி ஒடுங்கி, பதுங்கிப் பயந்து, அவனைப் பூதேவனென்று புகழ்ந்து, அவனே வழிகாட்டி, அவனே ஞானாசிரியன், அவனே ஆண்டவனின் பிரதிநிதி என்று கூறி வாழ வேண்டிய நிலையிலுள்ளான். கல்வி செல்வம் ஒழுக்கம் எல்லாம், ஜாதி உயர்வு என்ற பகலவன் முன் பனிபோன்றல்லவோ போகின்றன. இந்நிலையில் சமுதாயத்திலே சமத்துவம் ஏது! சமத்துவம் இல்லையேல் அங்கு சுதந்தரம் எங்கிருந்து காய்க்கும்? சகோதரத்துவம் எப்படிக் கனியும்? எல்லாம் ஏட்டில் எழுதி அழுது பார்க்கவே முடியும்

அன்று புகுத்தப்பட்ட வர்ணாசிரமம் இன்றுமங்கிமடிந்து போகும் நிலைமைக்கு வந்து விட்டதை நன்கு உணர்ந்த ஆச்சாரியார், இந்த ஆரம்பக் கல்வித் திட்டத்தை நாட்டில் புகுத்துவதன் மூலம் அதற்கு உயிர் கொடுத்து நிலைநாட்டப் பார்க்கிறார். இதனை நாம் பார்த்துக் கொண்டிருப்பதா? ஜாதிமுறையொழிந்து, சமத்துவம் நிலைபெற்று, நாட்டில் நல்வாழ்வு ஏற்படவேண்டுமென்று எண்ணும் எவர்தான் இதனைப் பார்த்துக் கொண்டு வாளாஇருப்பர்?

பயணம் நிற்காது

ஆச்சாரியாரால் கொண்டுவரப்பட்டிருக்கும் ஆரம்பக் கல்வித்திட்டம் நமது சமுதாயத்துக்கு ஏற்றதல்ல — கேடு விளைவிக்கக்கூடியது, எனவே அதனைக் கைவிடுக என்று பற்பல விதத்தில் கூறினோம்— கேட்கவில்லை. இதோ போர் தொடுத்துவிட்டோம்.

நமது சமுதாய நிலைமையில் உள்ள குறைகளை எடுத்துக் கூறுகிறோம். வீழ்ச்சியுற்றுத் தாழ்ச்சியுற்றுக் கிடக்கும் மக்கள் சார்பாகப் பேசும் நாம், வலிவுடையோராலும், வகையுடையோராலும் பழிக்கப்பட்டு வருதல்கண்டு ஆச்சரியப்படுவதற்கில்லை.

(12-ம் பக்கம் பார்க்க)

திராவிடநாடு

காஞ்சி] 19—7—53 [ஞாயிறு

பொதுச் செயலாளர் செய்தி

ஆச்சாரியார் 'அழைப்பை' ஏற்று, சென்றபோது, தி. மு. க. பொதுச் செயலாளர் தந்து சென்ற செய்தி:—

ஆச்சாரியாரின் அரசாங்க அழைப்புக் கிடைத்துவிட்டது. செயற்குழு கூட்டத்தை முடித்த நேரத்தில் என்னையும் என் தம்பிமாரில் நால்வரையும் அரசாங்கத் தூதுவர்கள் அழைத்தனர். 'புறப்படுங்கள்' எனப் போலீஸ் அதிகாரி கேட்டுக் கொண்டதும், புன்னகையுடன் நாங்கள் செல்கிறோம். நான்கு தம்பிமார்களை என்னுடன் அழைத்துச் செல்கிறேன்;—நாட்டிலே இன்னும் ஆயிரக்கணக்கான தம்பிமார்கள் இருக்கிறார்கள் என்ற எண்ணத்தோடு, துணிவோடு, பெருமிதத்தோடு! "தம்பியுடையான் படைக்கஞ்சான்" என்று நான் அடிக்கடி கூறுவதுண்டு. இன்று நடக்கவிருக்கும் போராட்டங்களில் வெற்றி நமக்கே!

தம்பிமார்களுக்கு ஒரு வார்த்தை:

ஆரம்பக் கல்வித் திட்டத்தை எதிர்த்து ஆச்சாரியார் வீட்டு முன்னிலையில் மறியல்; வடநாட்டு ஏகாதிபத்தியத்தை எதிர்த்து டால்மியாபுரம் போராட்டம்—இரு முனைகளில் அறப்போர் துவங்கியுள்ளோம். இந்த இரண்டு போராட்டங்களிலும், கண்ணியமும் அமைதியும் கடைப்பிடிக்க வேண்டும்.

ஆச்சாரியார் வீட்டுமுன்பு அறப்போர் துவங்க இருந்த சம்பத், சிறைக்குச் செல்கிறார். அந்தப் பொறுப்பினை தோழியர் சத்தியவாணிமுத்து அம்மையார் ஏற்று நடத்துவார். தொடர்ந்து பல தோழர்கள் ஈடுபடுவார்கள்.

என்னைச் சிறைக்குள் ஆச்சாரியார் தள்ளியிருக்கிறார். ஆனாலும், உங்களுடனேயே நான் இருக்கிறேன். போராட்டத்தை நடத்துங்கள் — கண்ணியத்தை மறக்காமல், அமைதியை இழக்காமல். வணக்கம்.

இதோ அடக்குமுறைப்பட்டியல்

ஆச்சாரியாரின் அடக்கு முறை ஆட்சிக்குப் பலியாகிச் சுட்டுக் கொல்லப்பட்டவர்கள் இதுவரை

9-பேர்

காயமடைந்து ஆஸ்பத்திரியில் இதுவரை சேர்க்கப்பட்டவர்கள்

60-பேர்

கைது செய்து காவலில் வைக்கப்பட்டிருப்பவர்கள் இதுவரை

1726-பேர்

நமது ஆசிரியர், தமது தம்பிமார்களில், தோழர்கள் நெடுஞ்செழியன், சம்பத், மதியழகன், நடராசன் ஆகிய நால்வருடன், ஆச்சாரியாரின் அடக்குமுறை விருந்தழைப்பை ஏற்றுச், சிங்காரமான சிறைமாளிகைக்குச் சென்றிருப்பதால் "திராவிட நாடு" தலையங்கம் வெளிவரவில்லை.

வியர்வையால் அல்லது ரத்தத்தால்!

கல்லக்குடியில் வடநாடு!

மாம்பலத்தில் வர்ணசிரமம்!

[11, 12-7-53 நாட்களில் சென்னையில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டில் பொதுச் செயலாளர் அண்ணா ஆற்றிய உரையின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது.]

அன்புள்ள தலைவர் அவர்களே! தோழர்களே! தாய்மார்களே! இரண்டு நாட்களாக மாநாடு இனிது நடைபெற்று முடிவடையும் தருவாயில் நான் பேச அழைக்கப்பட்டிருக்கிறேன். திராவிட நாட்டுப்பிரிவினையைப்பற்றி இதுவரை உலக நாடுகளோடு ஒப்புதல் காட்டி — அறிவுரை தருவதிலே ஆற்றல்படைத்த என் அருமைத் தோழர்களெல்லாம், ஆராய்ச்சியுரைக்குப் பதிலாக இன்று ஆத்திர உணர்ச்சியை அள்ளிக் கொட்டியிருக்கிறார்கள். காரணம், மாநாடு கூட்டி, கருத்தைப் பரப்புவதற்கு வந்திருக்கும் நாமெல்லாம் வரவேற்க இருந்த தோழர் கண்ணபிரானையும், மாநாட்டிலே பங்கு கொள்ளவந்த தோழர் ஆசைத்தம்பியையும், மற்றைய 65 தோழர்களையும், ஆச்சாரியார் சிறையில் அடைத்ததே.

உதாரணமாக,

தன் மனைவி திடீர் வியாதியால் தவித்துக்கொண்டிருக்கும்பொழுது துணைநாடி மருத்துவனிடம் ஓடி, "அவசரம், அவசரம் ஐயா! அலட்சியம் செய்யாதீர்!" என்று கணவன் கதறிமுறையிடும்போது, டாக்டர் "கொஞ்சம் பொறு, இப்போதுதான் 'டை' கட்டிக்கொண்டிருக்கிறேன்" என்றால், அந்த விண்ணப்பதாரி ஆத்திரமேலிட்டால் டாக்டரை; அடித்துவிடுவதும் உண்டு! நாட்டிலே இதுபோன்ற நிகழ்ச்சிகளைக் கேட்டுமிருக்கிறோம்.

அதுபோலக் கைதான தோழர்கள், கல்விக்கு வரும் ஆபத்தினை எடுத்துக்கூறச் சாதாரண காரியத்தைச் செய்ததற்காக — நல்ல தமிழிலே வேண்டுமானால் முறையாக முறையிடப்போன தோழர்களை ஆச்சாரியார் இப்படி அடக்குமுறைக்குப் பலியாக்கியது எவ்வளவுதான் சாந்தசீலன் என்று சிறப்புப் பெற்றிருந்தாலும், மனதைக் கட்டுப்படுத்தும் 'மகானாக' இருந்தாலும் இந்த சர்வாதிகாரப்போக்கை நிச்சயம் சகிக்க மாட்டான். அதன் எதிரொலிதான் நண்பர்கள் நடராசன், சம்பத், நெடுஞ்செழியன் கொட்டிய போர் முரசம்.

அமைதியாகவே போர்முறையினை விளக்கிவந்த நாம் 'அமளி' என்கிற அளவுக்கு இன்று ஆக்கப்பட்டிருக்கிறோமென்றால், ஆச்சாரியாருக்கு பத்து நாட்களுக்கு முன்பே, அவரின் எதிர்ப்புக் குரலையும் திரட்டிக் காட்டிவிட்டோம்; ஆனாலும் அவர் இன்றுவரை நம்மை அலட்சியமாகவே கருதுகிறார். ஆச்சாரியார் வீட்டுமுன் மறியல் என்று நாம் சொன்னபின், இன்றுதான் பெரியார் தீர்மானம் தந்திருக்கிறார். திராவிடர் கழகமும் 14ந்தேதி சட்டசபைமுன் மறியல் செய்யுமென்று. நமக்கும் அவர்களுக்கும் உள்ள வித்தியாசம், அவர்களால் ஒரேநேரத்தில் ஒன்றைத்தான் செய்யமுடியும்; நம்மால் அதேநேரத்தில் இருமுனை போராட்டம் நடத்திக் காட்டமுடியும். சில போராட்டத் திட்டங்களை சினிமாவிலே உட்கார்ந்து கொண்டே தீட்டித் தரமுடியும் என்றால். பெரியாரின் பிள்ளை சம்பத், ஆச்சாரியாரின் வீட்டு முன்னால்! பெரியார் கட்சியின் போராட்டம் சட்டசபை முன்னால்! தந்தை நடத்துவதற்குமுன் தனயன் ஆச்சாரியார் வீட்டின்முன் தடுத்து நிறுத்துகிறார்! காரணம் தந்தை 'நாம்' இருக்கும்போது தொந்தரவுக்கு ஆளாகலாமா என்ற எண்ணத்தால்.

இதையேதான் திராவிட முன்னேற்றக் கழக ஆரம்பத்திலே சொன்னேன் 'நாம் விலகினாலும், விரட்டப்பட்டாலும் என்றும் 'இரட்டைக்குழல் துப்பாக்கிகள்' என்று. ஒருவேட்டு ஆச்சாரியார் வீட்டுமுன், இன்னொன்று சட்டசபைமுன்! இந்த வேட்டுகள் கிளப்புமுன் வேதியர் தலைவர் வழிக்கு வருவாரா?....

அரசியல் மாநாட்டிலே இன்று தாய்மார்கள் ஆற்றிய போர்ப்பரணி கேட்டு அகமகிழ்கிறேன். அவர்கள் நிச்சயம் அறப்போரிலே வெற்றி அடைவார்கள் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை எனக்கு உண்டு. ஆருடமல்ல! அவர்களின் அறிவோடு, ஆர்வத்தோடு, அசைக்கமுடியாத இலட்சியத்தோடு நெருங்கிப் பழகி இருக்கிறேன் என்பதால். அறப்போர் வெற்றி அளிக்குமா என்பதில் எனக்கு ஐயமில்லை. ஆனால் கடுமையானதாக — நீண்டதாக இருக்கும் என்று நிச்சயமாக நினைக்கிறேன். ஆரம்பத்திலே உள்ள ஆர்வத்தை வைத்துக்கொண்டே அதனை வெற்றிபெறச் செய்யமுடியுமா என்ற அச்சம் எனக்கு இருக்கிறது.

ஆரம்பத்திலே கிடைக்கும் ஆர்வம், திடீரென்று வரும் ஆற்று வெள்ளத்திலே கிடைக்கும் நீர்போல! பொங்கித் தெரியும். பின்னால் குறைந்துவிடும். ஆனால், நான் விரும்புவது அப்படிப்பட்ட ஆற்று வெள்ள ஆர்வமல்ல—நீண்ட, சாதாரண நீர்த்தேக்கம் என்றும் வற்றாத ஆர்வம். இன்று பெற்றுள்ள இந்த எழுச்சி ஆர்வம், வளம் குறையாமல், வகை குறையாமல், திசை மாறாமல்; நீண்டு தொடரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பாம்புகளிலே பலவகை உண்டு. சில வளைந்தோடும். பல வளைந்து படமெடுத்து நிற்கும். ஆச்சாரியார் பச்சைப் பாம்பு போன்றவர், பச்சையிலையிலே ஒளிந்து பதுங்கிப் பதுங்கிப் பாய்கிறார். அக்ரமமான திட்டத்தையும் புகுத்த

வார்—புன்னகையும் மின்னிடுவார். 'பெரியார் என் நண்பர்' என்று போகுமிடங்களில் எல்லாம் பேசி மகிழ்வார். ஆனால் பெரியார் கொண்டுவரும் திட்டத்தை மறைமுகமாகத் தாக்குவார்.

இத்தாலி தேசத்து மாக்கவல்லி சொன்னான், 'ஒரு நாட்டை நீ சர்வாதிகாரியாக, ஆளவேண்டுமானால், நினைத்ததைச் சாதித்துக்கொள்ள வேண்டுமானால், நீ சிங்கமாகவும், சிறு நரியாகவும் இருக்கவேண்டும், என்றான். ஆச்சாரியார் அப்படிப்பட்டவர். ஆகையினால்தான் ஆரம்பத்திலே அச்சப்பட்டேன், போராட்டம் நீண்டதாக அமையுமென்று. இதேபோல டால்மியா—கல்லக்குடியாகும் வரையும் நிச்சயம் போர் ஓயாது. இன்று பெற்ற நெஞ்சுரத்தை நெகிழவிடாமல், பலாத்காரமற்று நடத்துவோம்.

ஆச்சாரியாரின் ஆரம்பக் கல்வித் திட்ட எதிர்ப்பு அறப்போருக்கு, யாரைத் தலைவராக அமைப்பது என்ற சபலம் எனக்கு ஏற்பட்டது. "சரி! பெரியார் எனக்கு நண்பர் என்று பேசிவரும் ஆச்சாரியாரை எதிர்க்க, பெரியாரின் பிள்ளை சம்பத்தையே தலைவனாக்குவது என்று எனக்கு உதித்தது. பெரியார், சம்பத்தை குருட்டுப்பிள்ளை என்று ஒரு முறை கூறி இருக்கிறார். அனுப்புகிறேன் அந்தக் குருட்டுப் பிள்ளையை, அறப்போருக்கு. அறிவு பெறட்டும், ஆச்சாரியார்-அதனின் 'ஒளி' கண்டு. பூரிப்படையட்டும் பெரியார் 'குருட்டுப் பிள்ளையின்' போர்த்திறன் கண்டு.

தோழர் கருணாநிதியை டால்மியாபுரப் போராட்டத்திற்கு தலைவராக நான் பணித்ததற்குக் காரணம், தோழர் கருணாநிதி கலைஞர்—கதைகளிலேதான் 'கைவரிசை' காட்ட முடியும். கற்பனைச்சித்திரத்திலேதான் அட்டைக் கத்தியினைத் தீட்டிக் காட்டமுடியும், என்று பலர் கேலி பேசுவதாகக் கேள்விப்பட்டேன். தோழர் கருணாநிதி கலைஞராகுமுன், ஒரு நடிகர், ஒரு நடிகராவதற்குமுன் ஒரு இலட்சிய மாணவர். மூன்று துறையிலே பணிபுரிந்தார் என்பது மட்டுமல்ல—தொல்லையும் பட்டிருக்கிறார், நம்மைப்போல. தோழர் கருணாநிதி சம்பந்தப்பட்ட ஒரு நாடகம் புதுச்சேரியில் நடந்தது. குழப்பம் ஏற்பட்ட காரணத்தால், கருணாநிதியை அடித்து, புதுச்சேரி வீதியிலே வீசினார்கள். கதையிலே மட்டுமல்ல—கற்பனையோடு என்ற அளவிலே அல்ல—கடமையிலே எடுத்ததை முன்வைத்த காலை, தவறிடமாட்டார் என்ற நம்பிக்கையை, நாடு அறியத்தான், நான் அவரை டால்மியாபுரம் போராட்டத் தலைவனாக நியமித்தேன். இதே நேரத்தில் திருச்சியிலே அந்தப் போருக்கான செயற்குழு கூடி ஆலோசனை நடத்திக்கொண்டிருக்கும். தோழர் கருணாநிதி கைதுசெய்யப்பட்டால், அடுத்த தளபதி தோழர் சி. பி. சிற்றரசு அங்கே! இங்கே, தோழர் சம்பத் கைதானால், தோழர் என். வி. நடராசன் தலைமையிலே போர் தொடரும். இரு போராட்டங்கள்! இடையே இந்த மாநாடு. உண்மையில் போர்ப்பரணி பாடுகிறது என்றால் மிகப் பொருத்தமாக இருக்கிறது.

நான் கவனித்தேன் நண்பர்கள் பேசும்போது, விஷயங்கள் வெளியே வந்தபோது இருந்த உற்சாகத்தைவிட, ஆச்சாரியாரின் ஆகாத கல்வித் திட்டத்தைப்பற்றி கண்டித்துப் பேசியபோது அவர்களிடத்திலும், உங்களிடத்திலும் கோபம், கொந்தளிப்பு கொஞ்சம் கூடுதலாக இருக்கக் கண்டேன். ஆத்திரப்படத் தேவையில்லை. நாம் அவசரக்காரர்களுமல்ல. நம்முடைய வலிமையைப்பற்றிப் பேசிவிட்டோம். நாம் மூவேந்தரின் மரபினர்—மறுப்பவரில்லை. களத்திலே வாளும், வேலும் கொண்டிருந்தவர்கள், இலக்கியச்சான்று இருக்கிறது. வீரர்கள் நாம்—விவேகிகள் நாம்—புறமுதுகிடாத புலியின் பரம்பரை நாம். வரலாறு பகரும் சான்று இவை.

ஆனால் மாற்றார் எப்படிப்பட்டவர்? அவருடைய படை பலம் எப்படிப்பட்டது? ஆச்சாரியாரிடம் உள்ள சிறை—துப்பாக்கி—தடி—தடை உத்தரவு இதல்ல, நான் சொல்வது. நம் தோழர்களுக்கு இது புதிதுமல்ல—நம் தோழர்கள் எதையும் ஈந்து, இலட்சியத்தை வெற்றி பெறச் செய்பவர்கள், என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. ஆனால் ஆச்சாரியாருக்கு அமைந்துள்ள இருட்டடிப்புச் செய்யும் பெரும் பத்திரிகைகளும், அவரின் அடிவருடிகளும் நம் போரினைத் திருத்திக் கூறும் திருவாளர்களாயிற்றே!

தாய்மார்கள் நம்மைக் களம்போக வாழ்த்துகிறார்கள்—மன்னிக்கவும்—வழியனுப்புகிறார்கள்— வழியனுப்பவில்லை — மன்னிக்கவும், நாங்களும் 'வந்தே தீருவோம்' என்று புறப்படத்தயாராயிருக்கிறார்கள்.

ஆடவரும், பெண்டிரும் வந்தாலும் இவர்களை லட்சியம் செய்யமாட்டேன். கைப்பிடியைப்பிடித்து இழுத்தால் வண்டி நிற்காமல் ஓட அதற்குப் பொருத்தப்பட்டுள்ள காஸ் (சக்தி)களை ஜூலை 15-ல், நீக்கி விடுவேன். வண்டி ஓடாதா? என்று ஆச்சாரியாரும், அவரைச் சார்ந்தாரும் அதற்கு ஆவன செய்யப்போவதாக அறிந்தேன். ஆச்சாரியார் அந்த முறையினைக் கைப்பற்றி நம் அறப்போரை அலட்சியப்படுத்தினால், 20-ந் தேதி மீண்டும் 'இரயில் நிறுத்தம்' என்று நாள் குறிக்கிறேன்! மீண்டும் காஸ்களைக்கழற்றி விடுவாரா? ஒரு மாதத்துக்கு முப்பது நாள். முப்பது நாளும் அவர் அதே முறையினைக் கையாண்டால், 'ரயில்வே முறை' மாற்றப்படுமே தவிர, போர் முறை நிச்சயம் மாற்றப்படாது. இதைவிட அவமானம் ஒரு அரசாங்கத்துக்கு வேறு என்ன உண்டு?

"ஐயா! உம்மைக் கெடுக்க அல்ல—ரயிலைக் கவிழ்க்க அல்ல — தண்டவாளத்தைப் பெயர்க்க அல்ல — வண்டியை நிறுத்தி — இரவிலல்ல! பகலில்! பொதுமக்களுக்கு, ஆச்சாரியாரின் ஆபத்தான கல்வித் திட்டத்தினையும், பொறுப்பு, தகுதி, நிலை, இவற்றினை மறந்து ஒரு உபகண்டத்து மக்களின் பெரும் கிளர்ச்சிக்காரர்களை முட்டாளென்றும், சிறுபிள்ளைத்தனம் என்றும் ஒரு முடிசூடாமன்னர் பேசுவது அறிவுடைமை ஆகுமா?" என்றும் விளக்கத் தானே அந்த அறப்போர்! எஞ்சினுக்கும், பெட்டிகளுக்கும் இருக்கும் சங்கிலியைப் பிடித்து இழுத்தால், நிற்க வைக்கும் சக்தியினை எடுத்து விட்டு, ரயிலை ஓட்டிக் காட்டுகிறேன் என்றால் இந்த அரசியல் கோழைத்தனத்திற்கு என்ன பெயர் வைப்பது?......

'இன்றிரவு உங்கள் வீட்டில், களவு செய்யப் போகிறேன்' என்று

ஒரு கள்ளன் கடிதம் எழுதுவதாக வைத்துக் கொள்ளுங்கள், உடனே, நீ வீட்டைக் காலி செய்வது என்றால், என்ன பொருள்? உங்களை என்னென்று அழைப்பது? இதைவிட ஒரு கட்சிக்கு வேறு பெருமை என்ன இருக்கிறது!

நாங்கள் களவாட வரவில்லை. இழந்த திராவிடத்தை மீட்க! தி. மு. க. தொண்டர்கள் தண்டவாளத்தில் 10 பேர் படுத்திருப்பர். அவர்கள் மீது ரயிலை ஆச்சாரியாரே வந்து ஓட்டுவாரா?...

இந்தப் போராட்டத்துக்கு பொதுமக்கள் ஆதரவுமட்டுமல்ல— பெரியார் என்னைத் திருத்துகிறார். இன்று 'விடுதலை'ப் பத்திரிகையிலே கால் பக்கம் இரயில்வே அட்டவணை வெளியாகியிருக்கிறது! இது வரை இந்த அளவுக்கு வெளியிடாதவர் இன்று வெளியிடுவானேன்? 'இங்கிருந்து, இன்னின்ன ரயில்கள் புறப்படுகின்றன. அண்ணாதுரையே, ஜாக்ரதை!' என்று எனக்கு அவர் நினைவு படுத்துகிறார். இது அல்லவா நல்ல 'குரு—சிட' சம்மந்தம்?

நான் 'நம் நாடு' பத்திரிகையிலே அந்த அட்டவணையைப் போடாததற்குக் காரணம், போர் ஆரம்பத்திலேயே அதைப் புரட்டிப் பார்த்தாகி விட்டது. ஆகவே, தி. மு. கழகமும், திராவிடர் கழகமும், சமயத்திலே சந்திலே நிச்சயம் சந்திக்கும் என்ற என் ஆசை எண்ணம் வீணாகவில்லை. திராவிடர் கழகமும், தி. மு. கழகமும், ஒன்றுபட்டு எதிர்க்கிறது, அவைகள் தனித்து இருக்கக் கூடாதா? இந்த அறப்போரில் குழப்பிய குட்டையில் மீன் பிடிக்கலாமே என்று கவலைப்படும் பலரை எனக்குத் தெரியும். 'என் நண்பர், என் நண்பர்' என்று சொல்லியும் பெரியாரும் எதிர்க்கிறாரே என்று ஏங்குபவரில் ஆச்சாரியாரும், ஒருவர்!

கல்லக்குடியிலே ஒரு களம். மாம்பலத்திலே ஒரு போராட்டம். இரண்டுக்குமிடையே பெரும் அளவு தூரமிருந்தாலும், வீணைக்கம்பிகள் ஒன்றுக்கொன்று விலகி இருந்தாலும், விரலால் மீட்டும்போது எப்படி அவை இணைந்து இன்னிசை எழுப்புகிறதோ, அது போல, இந்த இரண்டு போராட்டங்களின் வெற்றி மிக மூலாதாரப் பிரச்னை, மேலும் ...ரம் பெறப்பயன்படும்.

ஆகவே 'சபாஷ்' பெறுவதற்கு ஒரே நேரத்தில் நாம் இரு களத்தில் குதிக்கவில்லை. கை குலுக்குவார்கள் கரையிலே இருப்போர் என்று எதிர்பார்த்தும் அல்ல. அல்லது அடக்குமுறை மிகச் சாதாரணமாக அமையும் என்ற குருட்டு நம்பிக்கையாலுமல்ல.

தாலமுத்து — நடராசனைத் தந்தோம். பிணமாகத் தந்தார்! சாதாரணப் போர் என்று சொல்லிவிட முடியுமா?......என் கண்ணாலே பார்த்தேன், கும்பகோணத்தில் 144—தடை உத்தரவை மீற, நான் சர்வாதிகாரியாகத் தேவைப்பட்ட காலம். கையிலே கொடி ஏந்தி, 'தடை உத்தரவு ஒழிக' என்று ஒலித்துச் செல்வார்கள். போலீஸ்—'வானிலே' வந்து இறங்குவார்கள். 'வீதி வழியே இப்படிப் போகக் கூடாது' என்பார்கள். நண்பர்கள் போய்க் கொண்டே இருப்பார்கள். உடனே தடி பேசும், தோழர்கள் கீழே விழுந்தார்களே தவிர, திரும்பி ஓடியதில்லை. இரத்த ஆற்றிலே நீந்தினார்கள். கடைசியிலே அடித்தடித்து போலீசார் ஓய்ந்தனரே தவிர, படை வீரர்கள் ஓடவில்லை. ஒரு நாள், நண்பர் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஆதித்தன் என்னிடம் வந்தார். 'என்ன அண்ணாதுரை உன் தொண்டர்களை அடிக்க வேண்டுமென்றால், நாங்கள் கண்களை அல்லவா மூடிக்கொண்டு அடிக்க வேண்டியிருக்கிறது? மண்டை பிளந்து ரத்தம் ஓடினாலும், 'தாலமுத்து—நடராசா! என்று தானே கீழே வீழ்கிறார்கள். நான் இருக்கிற ஊரிலே இந்தப் போராட்டத்தை ஏனைய்யா வைத்துக் கொண்டாய்?" என்று கேட்டார், கண்களிலிருந்து கீழே விழக் காத்திருக்கும் கண்ணீருடன். நான் சொன்னேன், உங்கள் கடமை அடிக்கிறீர்கள். எங்கள் கடமை தாங்கிக் கொள்கிறோம். எங்கள் தொண்டரின் மண்டையிலிருந்து வரும் செந்நீரும், சட்டத்துக்குப் பயந்து, பாதுகாவலராக இருக்கும் உங்கள் கண்ணிலே பொங்கிவரும் கண்ணீரும் சேர்ந்தால், என்று சேர்கிறதோ அன்றுதான் ஒரு புதிய சமுதாயம் பிறக்கும் என்று குறிப்பிட்டேன்.

அந்த முறையிலே, ஆச்சாரியார் கொஞ்சம் அதிகமாகப் போலீசை ஏவலாம். அடி பலமாக விழலாம்! தாங்கிக் கொள்ளவேண்டும். தாங்கிப் பழக்கப்பட்டிருக்கிறோம். அடிபடும்போது 'அப்பா! அம்மா! ஐயோ!' என்ற கோழைக் குரல் கூடாது. 'தாலமுத்து—நடராசா!' என்ற அந்த மாவீரர்களின் பெயரே உச்சரிக்கப்படவேண்டும்......அடி விழ விழ, குரல் மாறும்!...அந்த மாற்றம், "வர்ணாச்ரமக் கல்வித் திட்டம் வீழ்க!" 'அறிவு வளர்க!' என்றே அமைய வேண்டும். சிறைச்சாலை, சித்ரவதை எதற்கும் சிந்தை கலங்கா நிலை வேண்டும். போராட்டம் பூப்பறிக்கச் செல்வது போலல்ல—கடுமையான கள்ளி, முள் காட்டிலே, காலிலே செருப்பில்லாமல், நடப்பது போன்றது.

மலர் பறிப்பதல்ல — இந்தப் போர் — மனதிலே நிறுத்துங்கள். நீங்கள் களத்திலே குதிக்கத் துணிந்து விட்டீர்களென்றால், உண்மையில் உயிர்த் தித்திப்பை எண்ணிடாது, தாங்களே அர்ப்பணிப்பது போலாகும்.

ஆச்சாரியார் ஆரம்பத்தில் ஆணவமாகத்தான் இருப்பார்! இந்தி எதிர்ப்புக் காலத்திலே இழிதகை முறையிலே இதே ஆச்சாரியார் தாய்மார்களைச் சிறையிலே தள்ளினார். ஓமான் கடல் விழுங்கிவிட்ட நம் கோமான் பன்னீர்செல்வம், சட்டசபையிலே ஆச்சாரியாரைப் பார்த்துக் கேட்டார் "ஏனப்பா! தாய்மார்களை சிறையிலே தள்ளலாமா?" என்று கேட்டதற்கு "அவர்களுக்கு குழந்தைகளுக்குப் பால்தர வக்கு இல்லை அதனாலே சிறைக்குள் வந்து விட்டார்கள்" என்று கேலி பேசியவர் ஆச்சாரியார்.

"நடராசனை சிறையிலே தள்ளியது நியாயமா?" என்றார் நம் செல்வம்.

"அவன் படிக்காதவன்! என்றார் ஆச்சாரியார்.

"பெரியார் இராமசாமியைப் பெல்லாரிச் சிறைக்கு அனுப்பிவிட்டாயே நல்லதா என்றார்" பன்னீரார்.

"பெரியார் உடலுக்குப் பெல்லாரி சீதோஷ்ணம் பொருத்தமானதுதான்!" என்று நகைச்சுவை பேசினார் ஆச்சாரியார். அப்படிப்பட்ட ஆணவம் படைத்த அவரைத்தான் எதிர்க்கிறோம்!

சாணக்கிய பரம்பரையைச் சமருக்கழைக்கிறோம், நினைவில் நிறுத்து...

கள். 'மாக்வல்லியை' எதிர்க்கிறோம் மனதிலே வையுங்கள். புற்றீசல் போல் கிளம்பினோர் அன்று, எண்ணிப் பாருங்கள்.

நெஞ்சிலே நம்பிக்கையோடு, நேர்மையிலே உறுதிகொண்டு, கண்ணியமென்ற கவசமேந்திக் களம்நோக்கிப் புறப்படுவோம். ஒன்று இந்த சத்தற்ற கல்விமுறை ரத்தாகவேண்டும். அல்லது நாளையே 'வாபஸ்' வாங்குவது.

புதிய கல்வித் திட்டத்தை எம். எல். ஏக்கள் சட்டசபையில் எதிர்க்கப்போகிறார்கள். பொதுமக்கள் பின்வரிசையிலே இடத்துக்கு முந்துகிறார்கள். ஆச்சாரியார் தம் வாழ்க்கையில் 'முதல் புயலை' சந்திக்கப்போகிறார். [illegible] தேகம் இருக்கிறார். [illegible] இனிக் [illegible] நிச்சயம் [illegible] வேண்டும்.

[illegible] அழைக்கிறது [illegible] என்று [illegible] அழைக்கிறது [illegible] அழைக்கிறது [illegible] 'டால்மியா' [illegible] ரோம். [illegible] உலகுக்குப் பாலூட்டி [illegible] போர் [illegible] கொட்டி [illegible]

தமிழரைத் தாழ்வுபடுத்தும் [illegible] நேரு! தமிழரின் போராட்டங்களைத் துச்சமென மதித்து [illegible] படி 'முட்டாள்தனம்' என்றார்!

நமமைத் திட்டினார் நேரு! நாம் அந்த நெஞ்சு பொறுக்காத செய்தியினை எதிர்ப்பதற்குள், அதோ [illegible] ஆரியத் தலைவன், சென்னை [illegible] திட்டினான் இப்படி, "நீ கோழை — அதுவும் கோழிக்குஞ்சுக்குள்ள குணம் போல் [illegible] மனம் படைத்தவன்; [illegible] புத்தி படைத்தவன்" என்றார்.

[illegible] மன்றி, நமக்காக 'பதிகம் பாடிவிட்டாரே' என்று நான் அவரைப் பாராட்டவில்லை. நாவலர் ஒருத்தருக்குத் தென்கொரியத் தலைவனின் அர்ச்சனை இப்படியா இருக்கவேண்டும்? என்றுதான், ஏங்குகிறோம். 'வினைவிதைத்தவன் வினை அறுக்க வேண்டிவந்துவிட்டதே! நம்மால் திருப்பி அந்தத் தீய வார்த்தையினைத் தூவ முடியாது என்று அல்ல — ஒரு பெரும் தலைவரை இப்படியா பேசுவது என்பதே நம் முடைய ஏக்கம்

ஆகவே, திட்டலுக்குத் திட்டல் — தூற்றல் — பேச்சில் தாமாட்டான் தமிழன். இதோ செயல்முறை காணீர்! படையினைப் பாரீர்! என்று நேரு அறியப் பண்டிதருக்கு, பாடம் அமைய இம்மாநாடு பயன்பட வேண்டும்!" என்று கேட்டுக்கொள்கிறேன்.

★

7-ம் பக்கத் தொடர்ச்சி

உண்மையே வெல்லும் என்பது நம் பிக்கை. நம்பிக்கை நல்லதோர் சக்தி. நம் முயற்சிகளுக்கு, அது [illegible] நோக்கு [illegible] கிறது.

எனினும் நாம் உண்மை வெல்லும் என்பதோடு மட்டும் நின்று விடுவதில்லை. பல சமயங்களில் [illegible] வெற்றிக் [illegible] ளோம். [illegible] பற்றிய கவலை [illegible] பற்றிய கவலை [illegible] மதித்து, மலை [illegible] மறுபோன்ற [illegible] நீர் [illegible] காற்று போல் வீசும் [illegible] [illegible] தத்தை, [illegible] களைத் [illegible] அகழியைக் கடந்து, இருப்பு முள் வேலியைத் தாண்டிச் செல்லும், போர்வீரன், மண்ணில் புதைந்து, புழுக்களால் கொத்தப்பட்டு, அழுகிப்போய், [illegible] அலங்கோலமாகக் கிடக்கும் உருவங்களைக் காண்பான். தனக்கு முன்னம் அவ்வழி அப்பணியாற்றச் சென்றவன் அடைந்த கதி அது என்பது தெரியும். எனினும் அவன் தனது பயணத்தை நிறுத்திக் கொள்வதில்லை. பயணம் மரண மண்டலத்துக்கு இவனைக் கொண்டு செல்லக் கூடும். இல்லையேல் வெற்றிபுரி செல்வான். ஆனால் பயணத்தை நிறுத்திக்கொண்டால், பின்னோக்கிச் சென்றாலும் அவன் எங்கு போய்ச்சேர்வான்? பேடிகள் பட்டிக்கு! வீரன் அங்கு செல்லத் துணிவானா?

அதேபோல ஆரிய மதத்தை எதிர்த்து சிதைந்தவர் அனேகர். கிளம்பிய புரட்சிகள் அடக்கிவிடப்பட்டன. படைகள் சின்னாபின்னமாயின. ஜினரின் வெற்றி நிலைக்கவில்லை. புத்தர் இருக்கும்வரை, புற்றில் பாம்புபோல் பதுங்கியிருந்த ஆரியம், அவருக்குப் பிறகு அவர் வழி சென்றோரைத் தீண்டித் தீர்த்துவிட்டது. பலப்பல சீர்திருத்தவாதிகள், தமது பேச்சுப் பலிக்காது சோர்ந்து போனதும் நாம் அறிந்ததே. எனினும் நாம் நமது பயணத்தை நிறுத்திக் கொள்ள மறுக்கிறோம். துன்புறும் எளியோர் துயரம் தீர்க்கப்பட வேண்டும். உண்மையை உரைத்தே தீரவேண்டும். ஊறும் பழிக்கு அஞ்சி மெய்யை விடுத்து பொய் பேசிடுதல் பேடித்தனம். எனவேதான் நாம், எதிரிகள் அட்டகாசம் செய்வது கண்டு நில்லாது, நம்மவரில் சிலரே மருண்டு நம்மீது மோதிக்கொள்வது கண்டும் சஞ்சலம் அடையாது சமரை நிறுத்தாது நடத்துகிறோம்.

இப்போது புகுத்தப்பட்டிருக்கும் ஆரம்பக்கல்வித் திட்டம் அடியோடு ஒழியும் வரையில் அயரோம் —தொடுத்த போரைத் தொடர்ந்து நடத்துவோம்—பயணம் நிற்காது —இறுதிவரைநிற்காது! அதிகாரத்தைத் துப்பாக்கியாக மாற்றி வைக்கும் ஆச்சாரியார் இதனை உணர வேண்டும்.

★

சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும்தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தேதிக்கு ஒருவாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவை புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

முகவரியை மாற்றும்படி சொல்பவர்கள், சந்தா எண்ணையும் பழைய முகவரியையும் குறிக்கவும்.

மானேஜர்.

Bleed through.

அடக்குமுறையோடு ஆரம்பம்!

தி. மு. க. செயற்குழு முதல் கூட்டம்

சிறை புகுமுன் தீட்டிய முடிவுகள்

புதுச்சட்ட திட்டப்படி அமைக்கப்பட்ட கழகச் செயற்குழு 13-7-53ல் முதன் முதலாகக் கூடியது. கூடிமுடியுமுன், 'பாசிச'த்தின் அழைப்பு கிடைத்துவிட்டது முன்னணி வீரர்களுக்கும், பொதுச் செயலாளருக்கும்! — அடக்குமுறைக்கு ஆளாகுமுன், செயற்குழு தீட்டிய முடிவுகள் கீழே.

உறுப்பினர்களான தோழர்கள் ஜி. பி. சோமசுந்தரம் (சேலம்), சு. வீரபாகு (நெல்லை) என். வி. நடராசன் (சென்னை) ஈ. வி. கே. சம்பத் (கோவை), எஸ். முத்து (மதுரை), இரா. நெடுஞ்செழியன், ஏ. எல். சி. கிருஷ்ணசாமி (வட ஆற்காடு), சத்தியவாணிமுத்து, கே. ஏ. மதியழகன், முதலியோர் கலந்துகொண்டார்கள். செயற்குழுவின் முடிவுகளுக்குச் சம்மதம் தெரிவித்து தஞ்சை கே.கே. நீலமேகம், தென் ஆற்காடு ஆர். பாலகுருசாமி ஆகியோர், கடிதம் எழுதியிருந்தார்கள்.

கூட்டத்திற்கு பொதுச் செயலாளர் அண்ணாதுரை தலைமை வகித்தார்.

1. தி. மு. கழகத்துக்கென காகப் பணத்தைக்கொண்டு பொதுச் செயலாளர் 'நம் நாடு' எனும் தின இதழைத் துவக்கியிருப்பதை, இச் செயற்குழு அங்கீகரிப்பதுடன், அதன நிர்வாகத்தையும் வரவு செலவு கணக்கு நிர்வாகத்தையும் பார்த்துக் கொள்ளவும் பொதுச் செயலாளர் சி. என். அண்ணாதுரைக்கு இந்தச் செயற் குழு அனுமதியளிக்கிறது.

1. (a) 'நம் நாடு' இதழ் சம்மந்தமாக சென்னையிலுள்ள எந்த பாங்கியிலாவது கணக்கு வைத்துக்கொள்ள, இந்தச் செயற்குழு பொதுச் செயலாளர் அண்ணாதுரைக்கு அதிகாரம் அளிக்கிறது.

1. (b) பாங்கியில், 'நம் நாடு' இதழுக்காக வைக்கப்படும் கணக்கை நிர்வாகம் செய்ய, பொதுச் செயலாளர் யாரையேனும் மானேஜராக நியமித்துக் கொள்ள, செயற்குழு பொதுச் செயலாளருக்கு அதிகாரமளிக்கிறது.

2. ஜூலை 14-ந் தேதி புதிய கல்வித் திட்டத்தை எதிர்த்து, சென்னை முதலமைச்சர் ராஜகோபாலாச்சாரியார் இல்லத்தில் மறியல் செய்வதென்றும், இந்த மறியலைத் தலைமைதாங்கி நடத்தி வைக்கத் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களை நியமிப்பதென்றும் இச்செயற்குழு தீர்மானிக்கிறது.

2. (a) மறியலைத் தொடர்ந்து நடத்தவும், அவ்வப்போது தக்கமுறைகளைத் திட்டவும். பொதுச் செயலாளருக்கு, செயற்குழு அனுமதி அளிக்கிறது.

2. (b) மறியல் வெற்றிகரமாக நடைபெற, பணஉதவி உள்பட எல்லா வகையான உதவிகளையும் திரட்டித் தந்து ஒத்துழைக்கும்படி சென்னை மாவட்ட தி. மு. கழகத்தை இந்தச் செயற்குழு கேட்டுக் கொள்ளுகிறது.

3. ஜூலை 15-ல், திருச்சி டால்மியாபுரத்தில் ஆரம்பமாகும் அறப்போரை, தலைமை வகித்து நடத்த தோழர் மு. கருணாநிதி அவர்கள் நியமிக்கப்பட்டிருப்பதை இந்தச் செயற்குழு வரவேற்பதுடன் அந்தப் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்த அவ்வப்போது, போராட்டக் குழுவுக்குத் திட்டங்கள் தீட்டித் தர பொதுச் செயலாளருக்கு அதிகாரம் அளிக்கிறது

4. ஜூலை 15ல் ரயில் நிறுத்தக் கிளர்ச்சிசெய்து, தமிழரின் கண்டனத்தை பண்டிதர் நேரு அறியச்செய்யவேண்டும் என்று பொதுச் செயலாளர் அறிக்கை வெளியிட்டிருப்பதை செயற்குழு வரவேற்பதுடன், மேற்படி ரயில் நிறுத்தக் கிளர்ச்சியை வெற்றிகரமாக நடத்திவைக்கும்படி, தி.மு. கழகக் கிளைகளைக் கேட்டுக்கொள்கிறது.

5. ஜூலை 8ந் தேதியன்று தி. மு. க. பொதுச் செயலாளர் அறிக்கைப்படி, தி.மு.க. ஆதரவு பெற்ற எம். எல். ஏ.க்களைக் கொண்டு ஆச்சாரியார் கல்வித் திட்டக்கண்டன அறிக்கை கொடுக்க ஊர்வலம் செல்ல அனுமதியளிக்க மறுத்த சர்க்காரின் ஜனநாயகத்துக்கு புறம்பான, அடிப்படை உரிமையைப் பறிக்கிற, எதேச்சாதிகார போக்கை செயற்குழு, மிக வன்மையாகக் கண்டிக்கிறது:

5. (a) சர்க்காரின் தடையைமீறி ஊர்வலம் நடத்தி, கைதாகி, சிறைச் சாலையில் அடைபட்டிருக்கும் தோழர்களும், தாய்மார்களுமாகிய 67 தி. மு. க. உறுப்பினர்களை செயற்குழு பாராட்டுகிறது.

★

காஞ்சியில்
கடை அடைப்பு

பொதுச் செயலாளர் அண்ணா, இரா. நெடுஞ்செழியன், ஈ. வி. கே. சம்பத், கே. ஏ. மதியழகன், என். வி. நடராசன், ஆகிய கழக முன்னணித் தோழர்களை கைது செய்ததை முன்னிட்டு, 14—7—53-ல் காஞ்சிபுரத்தில் எல்லாக் கடைகளையும் கதவடைப்பு செய்தனர். கழகத் தோழர்கள், 'அண்ணாவை விடுதலை செய்' 'ஆச்சாரியார் கல்வித் திட்டம் ஒழிக' என்று கூறியவண்ணம் ஊர்வலமாக வந்து, மாலை கெங்கை கொண்டான் மண்டபத்தருகில், நெல்லைத் தமிழன்பன் தலைமையில் கண்டனக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது தோழர்கள் சி.வி.எம். அண்ணாமலை, கே. டி. எஸ் மணி, ஆர். கே. மூர்த்தி ஆகியோர் அடக்குமுறையைக் கண்டித்தும், ரயில் நிறுத்தப்போராட்டம் குறித்தும் பேசினர். மழை பெய்தும்கூட கூடியிருந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் கடைசிவரையில் கலையாமல் இருந்ததானது, பொதுமக்களுக்கு போராட்டம் குறித்து எவ்வளவு ஆர்வம் இருந்தது என்பதை எடுத்துக் காட்டியது.

ரயில் நிறுத்தம், ஒரு பெரிய வெற்றி

எதேச்சாதிகார சர்க்காரின் வீழ்ச்சிக்கு ஒரு எடுத்துக்காட்டு

நாடெங்கும் கண்டனம்

தமிழ் மக்கள் செய்யும் காரியங்களை எல்லாம் 'முட்டாள்தனம்' என்று கூறிய நேருவின் திமிரான போக்கைக் கண்டிப்பதன் அறிகுறியாகச் செய்யப்பட்ட ரயில் நிறுத்தம், தமிழ் நாடெங்கும் வெற்றிகரமாக நடைபெற்று விட்டது.

15—7—53 காலை 6-மணிக்குக் காஞ்சிபுரத்திலிருந்து சென்னை செல்லும் முதல் வண்டி புறப்பட்டது. தோழர் டி. சபாபதி அவர்கள் தலைமையில் ஐம்பது தொண்டர்கள் வண்டியில் ஏறிக்கொண்டனர் ஒரு பர்லாங்கு தொலைவு சென்றது உடனே தோழர்கள் வண்டியை நிறுத்தினர் — மீண்டும் நகரத் தொடங்கியது—தொடர்ந்து நிறுத்தப்பட்டது. மூன்று கல் தொலைவுக்குள் ஐந்துமுறை நிறுத்தப்பட்டது. ஐந்து தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர். நத்தப்பேட்டை என்ற ஸ்டேஷனை அடைந்ததும், சங்கிலியை இழுத்தால் வண்டி நிற்கும் ஏற்பாடு மாற்றப்பட்டு, ரயில் ஆமை வேகத்தில் செல்ல ஆரம்பித்தது. வண்டி வாலாஜாபாத் ஸ்டேஷனை அடைந்ததும், தண்டவாளத்தில் படுப்பதன்மூலம் வண்டியை நிறுத்தும் முறையைத் தொண்டர்கள் கையாண்டனர் — கைது செய்யப்பட்டனர்.

அரக்கோணத்திலிருந்து செங்கற்பட்டுவரை உள்ள எல்லா ஸ்டேஷன்களிலும் இந்த முறை கையாளப்பட்டுத், தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர். மொத்தம் 149 பேர் கைது செய்யப்பட்டவர்.

புகை வண்டிகளை நிறுத்துவது என்ற செய்தியை ஏற்கெனவே தெரிந்திருந்த பொதுமக்கள் காஞ்சிபுரம் புகைவண்டி நிலையத்தைச் சுற்றி பதினாயிரக்கணக்கில் கூடி விட்டனர் அளவுக்கு மீறிய கூட்டம் சேர்ந்திருந்த போதிலும், அமைதிக்குச் சிறிதும் பங்கம் உண்டாகாதபடி நடந்து கொண்டனர். காஞ்சிபுரத்தைப் போலவே, ஒவ்வொரு புகைவண்டி நிலையத்திலும் மக்கள் ஏராளமாகக் கூடி நின்று வண்டியை நிறுத்தும் தொண்டர்களுக்கு ஆதரவும், ஊக்கமும், உற்சாகமும் ஊட்டினர்.

காஞ்சிபுரத்திலிருந்து காலை 7-20-க்குப் புறப்பட வேண்டிய துரித (Express Train) வண்டி ஒன்பது மணிக்கே புறப்பட முடிந்தது. அந்த வண்டியில் செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. செயலாளர் தோழர் சி. வி. எம். அண்ணாமலை அவர்கள் தலைமையில் 23-தொண்டர்கள் புறப்பட்டனர். செங்கற்பட்டுக்கு வண்டி செல்வதற்குள் எல்லோரும் கைது செய்யப்பட்டனர்.

காலை 8-10-க்கு காஞ்சியிலிருந்து புறப்படவேண்டிய வண்டி காஞ்சிபுரத்தைவிட்டுப் புறப்பட்ட நடுவழியில் நிறுத்தப்பட்டு, மாலை 1-30-மணிக்கே செல்ல முடிந்தது. தோழர் கே. டி. எஸ். மணி, அவர்கள் தலைமையில் 19-தொண்டர்கள் அவ்வண்டியில் சென்று, ஒவ்வொரு ஸ்டேஷனிலும் வண்டியை நிறுத்திக் கொண்டும், உடனுக்குடன் கைதாகிக்கொண்டும் செங்கற்பட்டை அடைந்ததும் அனைவரும் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டனர்.

காலை 10-30-மணிக்கு காஞ்சிபுரத்திலிருந்து புறப்படவேண்டிய வண்டி மாலை 3-மணிக்கே புறப்பட்டது. தோழர் எத்திராஜ் அவர்கள் தலைமையில் 21-தொண்டர்கள் அவ்வண்டியில் சென்று ஆங்காங்கு ரயில்களை நிறுத்திக், கடைசியாகச் செங்கற்பட்டுக்கு வண்டி சென்றதும் எல்லோரும் கைது செய்யப்பட்டனர்.

மாலை 3-15-க்கு அரக்கோணத்திலிருந்து புறப்படவேண்டிய வண்டி தடைப்பட்டுவிட்டது. அந்த வண்டியில் செல்ல இருந்த தோழர் சி. கிருஷ்ணனும் தொண்டர்களும் மாலை 5-மணிக்கு காஞ்சி வழியாக அரக்கோணம் செல்லும் வண்டியை நிறுத்திக் கைதானார்கள்.

காலை 5-30-மணிக்குச் செங்கற்பட்டிலிருந்து புறப்பட்டு அரக்கோணம் செல்லும் வண்டியில் தோழர் சம்பத் அவர்கள் தலைமையில் 8-தொண்டர்கள் சென்று பல இடங்களில் வண்டியை நிறுத்திக் கைதாகிக் காவலில் வைக்கப்பட்டனர்.

காஞ்சிபுரத்திலிருந்து அரக்கோணம் செல்லும் பாதையில் திருமால்பூர் என்ற ஸ்டேஷனில் காஞ்சிபுரம் தோழர்களும், திருமால்பூர்த் தோழர்களும் வண்டியை நிறுத்திக் கைதானார்கள். கைதானவர்களின் விபரம் வருமாறு:

முதல் படை தோழர் சபாபதி அவர்கள் தலைமையில் தோழர்கள்

ஆர். சுப்பிரமணியன்
ராதாகிருஷ்ணன்
குப்புசாமி
இ. திருநாவுக்கரசு
நாராயணசாமி
சோ. சுப்பிரமணியன்
பூங்காவனம்
டி. கச்சபாளையம்
ராமலிங்கம்
எம். குமாரசாமி
சி. சின்னக்குழந்தை
பி. டி. மாணிக்கவேலு
கே. ஆனந்தம்
என். பி. ஆறுமுகம்
கே. டி. ஆயப்பன்
சி. வெங்கடேசன்
பி. கச்சபாலையம்
கே. முனுசாமி
எம். எஸ். மணி
வெ. சம்பந்தன்.

2-வது படை: தோழர் சி.வி.எம். அண்ணாமலை தலைமையில் தோழர்கள்

இளங்கோவன்

ஜி. முனுசாமி
கே. கண்ணப்பன்
கு. அண்ணாமலை
டி. சீனிவாசன்
கே. கோவிந்தராசு
டா. பெருமாள்
கே. வேணு
முத்தியாலு
வெ. வைத்தியநாதன்
கமலக்கண்ணன்
வரதன்
முனுசாமி
பாலகிருஷ்ணன்
கா. வெ. முருகேசன்
கி. முனுசாமி
ஏ. கே. இராசமாணிக்கம்
ஆர். ராமன்
எஸ். வஜ்ஜிரம்
பி. ஏகாம்பரம்
என். கமலநாதன்
தா. மு. சீனிவாசன்
ஆ. சுப்பிரமணியன்

3-வது படை: தோழர் சம்பத் தலைமையில்

ஐயம்பேட்டை தோழர்கள்,

சா. முத்துகுமாரசாமி
எம். ஷண்முகவடிவேலு
தனிகாசலம்
பி. டி. வெங்கிடேசன்
எல். முனியப்பன்
மு. தணிகாசலம்
பி. டி. வெங்கிடசுப்பு
ஆர். அர்தநாரி.

4-வது படை தோழர் கே. டி. எஸ். மணி தலைமையில் தோழர்கள்,

த. பச்சைப்பன்
எம். முனுசாமி
வெங்கடராசுலு
ரா. கண்ணன்
எல். பச்சையப்பன்
ஏ. கிருஷ்ணன்
க. கிருஷ்ணன்
சி. கிருஷ்ணன்
ஏ. நாகப்பன்
ஏ. சொக்கலிங்கம்
கே. கன்னியப்பன்
பி. நாராயணசாமி
ப. விஸ்வநாதன்
எஸ். கோபால்
ச. பெருமாள்
எம். பி. சங்கரன்
ஏ. திருநாவுக்கரசு.
(திருவத்திபுரம் தோழர்கள் வ. ஆ.)
பி. குட்டியப்பன்
பு. து. ஜனார்த்தனம்.

5-வது படை: தோழர் டி. டி. கிருஷ்ணன் தலைமையில் தோழர்கள்.

சேகர்
ஜெயராம்
ரங்கநாதன்
வீரராகவன்
கோவிந்தன்
ராஜாராம்
ஆறுமுகம்
துரைசாமி
கன்னியப்பன்
சுப்பிரமணியன்
ரகுபதி
சுப்பிரமணியன்
ஆர். கோவிந்ராசு
கே. அண்ணாமலை
சி. ஆர். வெள்ளையப்பன்
கே. கன்னியப்பன்
ஆர். கோவிந்தராசு
கே. அண்ணாமலை

6-வது படை தோழர் ஈ. எத்திராஜ் அவர்கள் தலைமையில் தோழர்கள்

ஈ. தம்பிரான்
ஜி. பூங்காவனம்
எஸ். ஏகாம்பரம்
எம். கச்சபாலயம்
ப. கன்னியப்பன்
எம். இராமச்சந்திரன்
ப. தேவராசன்
ப. திருநாவுக்கரசு
எம். மாரிமுத்து
டி. கோவிந்தராசு
பூங்காவனம்
சி. டி. முனுசாமி
திருவேங்கடம்
கே. பஞ்சாட்சரம்
எம். நாகரத்தினம்
ஜி. ராசாராம்
வி. எஸ். மணி
டி. குமாரசாமி
கண்ணன்
கிருஷ்ணன்
நடராசன்

ஆகியோரும்

ஐயம்பேட்டை தோழர்கள்

பி. டி. மாணிக்கவேல்
எம். நாராயணசாமி
எம். பெருமாள்
மு. குமாரசாமி
சி. சின்னகுழந்தை
அண்ணாமலை
எம். தேவராஜி
நரசிம்மன்
ராமலிங்கம்

ஆகியோரும்

எம். முருகேசன்
ஆர். வெங்கட்ராமன்
ஆர். கன்னியப்பன்
கே. சண்முகம்
கச்சபாலயம்
ப. சண்முகம்
ச. முருகேசன்
சி. ஆர். வெள்ளையப்பன்
கோபால் (செவிலிமேடு)
எஸ். வஜ்ஜிரம்
ஏகாம்பரம்
தி. கோபலன்
கே. கோபாலன்
வி. என். மார்க்கு

ஆகியோரும் மற்றும் இயக்கப் பற்றுள்ள தோழர்களும், சிறுவர்கள் கல்வியில் ஆர்வம் உள்ள வேறு பலரும் கைதியாகி உள்ளனர்.

மேலும்,

சென்னை, செண்டரல்
தூத்துக்குடி
டால்மியாபுரம்
தஞ்சாவூர்
புதுகோட்டை
திருநெல்வேலி
கோயமுத்தூர்
மதுரை
சேலம்
வெல்லூர்
உடுமலைப்பேட்டை
திண்டுக்கல்
செங்கற்பட்
திருச்செங்கோடு
பாலக்காடு
விருதுநகர்
எட்டயாபுரம்
திருவாரூர்
காரைக்குடி
தென்காசி
கல்லடக்குறிச்சி
சிதம்பரம்
காட்பாடி
விழுப்புரம்
திண்டிவனம்
கடலூர்
திருவண்ணாமலை
திருச்சி
லால்குடி
விருத்தாசலம்
போளூர்
இராசபாளையம்
நாகபட்டினம்
தாம்பரம்
கூடுவாஞ்சேரி
வாணியம்பாடி

ஈரோடு
திருப்பூர்
ஆப்பூர்
களமபூர்
சோழவந்தான்
திருமங்கலம்
பாபநாசம்
நாகூர்
சிக்கல்
சமயநல்லூர்
திருச்செந்தூர்
செங்கோட்டை
ஜோலார்பேட்டை
திருவள்ளூர்
வண்டலூர்
மதுராந்தகம்
அச்சரப்பாக்கம்
மணியாச்சி
மணப்பாறை
திருத்துறைப் பூண்டி
கரூர்
குளித்தலை
மாயவரம்
சீர்காழி
கும்பகோணம்
இராமநாதபுரம்
அரக்கோணம்
தக்கோலம்
திருமால்பூர்
திருப்பத்தூர்.

ஆகிய இடங்களில் ஆயிரத்துக்கு மேற்பட்ட தோழர்கள், சங்கிலியை இழுத்தும், தண்டவாளத்தில் படுத்தும், ரயில்களை நிறுத்திக் கைதாகியுள்ளனர். இதுவரை நமக்குக் கிடைத்துள்ள செய்திகளைமட்டும் 'திராவிடநாடு' இதழில் சுருக்கமாக வெளியிடுகிறோம். முழுவிபரங்கள் 'நம்நாடு' தின இதழில் தொடர்ந்து வெளியாகிக்கொண்டிருக்கிறது.

☆

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்! இப்படி எவ்வளவு காலத்துக்குத்தான் பார்த்துக் கொண்டிருப்பது என்ற கேள்விக்குப் பொது மக்கள் தான் தகுந்த பதில் அளிக்க வேண்டும்.

இங்கே ஆச்சாரி சர்க்கார் இரத்த வெறிபிடித்து, எத்தனை பேரைக் கொன்று குவிப்பது? எத்தனை பேரைச் சித்திரவதை செய்து, ஆஸ்பத்திரியில் படுக்கவைப்பது? எத்தனை பேரைச் சிறைக்குள் தள்ளிக் கொடுமைப் படுத்துவது? என்று கணக்குப் போட்டுக்கொண்டிருக்கிறது. நமக்குக் கிடைத்த செய்திகளின்படி இதுவரை 1760 பேருக்குமேல் சிறைக்குள் தள்ளிவிட்டு, மேலும் சிறைக்கதவுகளைத் திறந்து வைத்துக்கொண்டு, நாள் ஒன்றுக்கு ஐம்பது, நூறு என்ற கணக்கில உள்ளே தள்ளியபடி இருக்கிறது.

அங்கே நேரு சர்க்கார், திராவிட மக்கள் செய்யும் காரியங்களை எல்லாம்,

"நான் சென்ஸ்".

"சிறு பிள்ளைத்தனம்"

"முட்டாள்தனம்"

என்று திமிரோடு பேசிக்கொண்டு நம்மை எல்லாம் நையாண்டி செய்கிறது.

உயிரைக் கொடுத்து மானத்தைக் காக்கும் மரபினரே! இன்னும் எத்தனை நாட்களுக்கு இந்தக் கொடுமையையும் அட்டகாசத்தையும் பார்த்துக்கொண்டிருக்கப் போகிறீர்கள்?

அதோ! நமது பொதுச்செயலாளர் அண்ணா சிறைக்குள்! நமது ஆக்க வீரர்களான நெடுஞ்செழியன், சம்பத், மதியழகன், நடராசன், ஆசைத்தம்பி ஆகியோர் சிறைக்குள்! அதோ! நமது கருணாநிதி காவலில்! எலும்புடைபட்ட கண்ணதாசன் குற்றுயிரோடு, உடல் நொந்தாலும் உள்ளம் நோகாமல் ஆஸ்பத்திரியில்! ஆயிரத்துக்கு மேற்பட்ட முன்னணி வீரர்கள் சிறைக்கோட்டத்தில்! அவர்கள் உள்ளே!! நீங்கள் வெளியே!! என்ன செய்யபோகிறீர்கள்? எங்கே உங்கள் பதில்? என்று நாடு கேட்கிறது! தன்மானத் தமிழ் மக்கள் கேட்கின்றனர்! திக்கெட்டும் புகழ் பரப்பி வாழ்ந்த திராவிடம் கேட்கிறது! மானத்தைவிட்டு உயிர்வாழ்வது நம்முடைய பண்பல்லவே! எனவே என்ன செய்யப் போகிறீர்கள்? என்று கேட்கிறது.

☆

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. தோழர்களுக்கு

உங்கள் எல்லோருக்கும் எனது நன்றி கலந்த வணக்கம்.

நமது பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா அவர்களின் கட்டளையேற்று 15-ம் நாள் இரயில்வே நிறுத்தத்தில் ஈடுபட்டு சிறப்பான முறையில், இரயில்களை நிறுத்தி, எத்தகைய அசம்பாவிதமும் நிகழா வண்ணம் நடந்து பணியாற்றி சிறைப்படுத்தப் பட்டுள்ளீர்களென்ற செய்தியைக் கேட்டு, நான் மிக்கமகிழ்ச்சி அடைகிறேன்.

அவற்றோடு, ஆச்சாரியாரின் புது "கல்வி திட்டத்தை" எதிர்த்து சென்னை ஆச்சாரியாரின் வீட்டின் நாம் சென்று மறியலில் ஈடுபட இருக்கிறோம் என்பதை மறந்துவிட வேண்டாம்.

தூத்துக்குடியிலும், டால்மியாபுரத்திலும் நமது தோழர்களையும் பொது மக்களையும், ஆச்சாரியார் தர்பார் அளவுக்குமீறி அக்கிரம காரியத்திலிறங்கி ஒன்பது தோழர்களுடைய உயிரை போக்கியதோடு எமது அருமைத் தோழர் கவிஞர், கண்ணதாசன் அவர்களுடைய உயிரை ஊசலாடும் நிலையில் வைத்துள்ளார்கள். நமது அண்ணா அவர்கள், "எதையும் தாங்கும் இதயம் வேண்டும்" தம்பிமார்களே என்று, நமக்கு அடிக்கடி கூறி வந்ததை மனதில் இருத்தி சென்னை மறியலுக்கு யார் யார் செல்ல இருக்கிறீர்கள் என்ற பட்டியலை எனக்கு உடனே எழுதியனுப்புமாறு வேண்டுகிறேன்.

மாண்ட தோழர்கள் எண்ணத்தை நிறைவேற்ற கிளம்புங்கள், அறப்போர் களத்திற்கு என்று உங்களை அழைக்கிறேன்

சிறையிலிருக்கிற நமது தலைவர்களையும், தோழர்களையும் விடுதலை செய்வதோடு, ஆச்சாரியாரின் புதுக் கல்வித் திட்டம், கைவிடப்படும் வரையில், உறங்காதீர்கள், ஓயாதீர்கள் என்று உங்களை நான் மிக்க பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

சி. வி. எம். அண்ணாமலை,
செ. மா. செயலாளர்.

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.